மலர் 8 ● இதழ் 5 ● செப்டம்பர் 2023 ● ரூ.20/-

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்திரயான்-3

நிலவைத் தொட்ட இந்தியா!

## உயர்கல்வி... சாத்தியங்களும் சவால்களும்!

தமிழகப் பொதுக்கல்விப் போராளிகள்

- இரண்டு புதிய பகுதிகள் ஆரம்பம்



# மரம் வளர்ப்போம்
# மழை பெறுவோம்



சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்



**சக்தி ®**

**மசாலா**



**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.

போன் : 0424 - 2533601.

E-mail : headoffice@sakthimasala.co.in

www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள்
• **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

- 100% PLACEMENT OPPORTUNITY
- ADMIRABLE INFRASTRUCTURE
- WORLD CLASS ACADEMIC AMBIENCE
- EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in


Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

கடந்த ஆகஸ்ட் 23–ம் தேதி சந்திரயான் – 3 விண்கலத்தின் வெற்றியை இந்தியா கொண்டாடியது. அந்த விண்கலத்தில் சென்ற விக்ரம் லேண்டர், வெற்றிகரமாக நிலவில் இறங்கியது. விண்வெளி வரலாற்றில் ஒரு புதிய சரித்திரத்தை இந்தியா எழுதியது. அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை அடுத்து நிலவில் விண்கலத்தைத் தரையிறக்கும் நான்காவது நாடு... இதுவரை யாரும் ஆராய்ந்து பார்க்காத நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கும் முதல் நாடு என்ற இரட்டைப் பெருமைகளை இந்தியா பெற்றது.

# கல்வியின் பெருமை உணர்வோம்!



இந்தப் பெருமைமிகு தருணத்தில், அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' நாளிதழில் சந்திரயான் வெற்றியைப் பற்றிய கட்டுரை ஒன்றில் அமெரிக்கர் ஒருவர் எழுதிய பின்னூட்டம் ஒன்றைக் கவனிக்க முடிந்தது. சந்திரயான் விண்கலத்தின் விக்ரம் லேண்டரை நிலவில் நிலைநிறுத்தும் பணியை இஸ்ரோ விஞ்ஞானிகள் குழு பெங்களூருவில் இருந்தபடிச் செய்தது. ஒவ்வொரு கட்டமாக அதை நிலவை நோக்கிச் செலுத்தி, அதன் வேகத்தைக் குறைத்து, சாமர்த்தியமாகத் தன் நான்கு கால்களை ஊன்றி அது நிலவில் நிறுத்தப்பட்ட பணி மிகவும் சிக்கலான தொழில்நுட்பங்களைக் கொண்டது. அதை மிக எளிமையாகச் செய்து முடித்தார்கள் இஸ்ரோ விஞ்ஞானிகள். அதில் கணிசமான அளவில் பெண்களும் இருந்தார்கள். எளிமையாகப் புடவையும் சல்வாரும் அணிந்தபடி இருந்த இந்தப் பெண்கள், சுறுசுறுப்பாகப் பணி செய்தார்கள். இந்தியா பெண்கல்வியில் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது, அறிவியல் சார்ந்த பணிகளில் பெண்களின் பங்கு எவ்வளவு உயர்ந்துள்ளது என்பதன் அடையாளம் இவர்கள். அதை அந்த அமெரிக்கர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அமெரிக்கர் பெரிதும் பாராட்டிய இன்னொரு விஷயம், சந்திரயான் திட்டத்தில் பங்கேற்ற இந்திய விஞ்ஞானிகளின் பின்னணி. இந்தியாவின் முதன்மையான கல்வி நிறுவனங்களாக ஐ.ஐ.டி., ஐ.ஐ.எஸ்.சி மற்றும் ஐ.ஐ.எம் போன்றவையே கருதப்படுகின்றன. இவற்றில் கல்வியை முடிக்கும் பலரையும் ஆப்பிள், மைக்ரோசாஃப்ட், கூகுள், அமேசான் போன்ற பல சர்வதேச நிறுவனங்கள் அதிக சம்பளம் கொடுத்து அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு இழுத்துவிடுகின்றன. மத்திய அரசின் உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு செல்வது இந்த முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்குத்தான். ஆனால், அங்கு உருவாகும் பலர் இந்த

தேசத்தின் கட்டமைப்புக்குப் பணியாற்றுவதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

அதேநேரத்தில் மாநில அரசுக் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வித்தரத்தை இங்கிருக்கும் கல்வியாளர்கள் பலர் பெரிதும் கேள்வி கேட்கிறார்கள். ஆனால், அவற்றில் படித்தவர்களே இஸ்ரோவின் உயர்மட்டக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களின் உழைப்பால்தான் இந்தியா விண்வெளியில் தொடர்ச்சியாகச் சாதித்துவருகிறது என்பது உண்மை.

தற்போது இஸ்ரோவின் தலைவராக உள்ள சோம்நாத், கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள டிகேஎம் பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பிரிவில் பி.டெக் பட்டம் பெற்றவர். யு.ஆர்.ராவ் செயற்கைக்கோள் மையத்தின் இயக்குநராக உள்ள சங்கரன், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பங்கு சந்திரயான் திட்டத்தில் முக்கியமானது. இதன் இயக்குநர் டாக்டர் உன்னிகிருஷ்ணன், கேரளா பல்கலைக்கழகத்தில் மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பட்டம் பெற்றவர்.

சந்திரயான்–3 திட்ட இயக்குநராகப் பணியாற்றி தமிழகத்துக்குப் பெருமை சேர்த்த வீரமுத்துவேல், விழுப்புரத்தில் உள்ள ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளோமா முடித்தவர். பிறகு சென்னை சாய்ராம் கல்லூரியில் பட்டம் பெற்றார். சந்திரயான்–3 துணைத் திட்ட இயக்குநர் கல்பனா, சென்னையில் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் பி.டெக் முடித்தவர். தற்போது சூரியனை ஆராயச் சென்றிருக்கும் ஆதித்யா எல்–1 விண்கலத்தின் திட்ட இயக்குநராகப் பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி பணியாற்றுகிறார். தமிழகத்தின் இன்னொரு பெருமைக்குரிய அடையாளமான அவர், நெல்லை அரசு இஞ்சினியரிங் கல்லூரியில் படித்தவர்.

உலக நாடுகள் எல்லாம் இந்தியாவின் முன்னணி அறிவுத்திறமைகளைக் கொத்திக்கொண்டு போனபிறகும் நிலவையும் சூரியனையும் வசப்படுத்தும் அளவுக்குத் திறமைசாலிகளை இந்தியா கொண்டிருக்கிறது. சந்திரயான் மற்றும் ஆதித்யா வெற்றிகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆர்வத்தை இளம் தலைமுறையினர் மனத்தில் விதைக்கிறது. இந்த அறிவுத் தலைமுறை தொடரட்டும்!

அன்புடன்,

**சூர்யா**

நிறுவனர் – அகரம் பவுண்டேஷன்


யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 8 • இதழ் 5

செப்டம்பர் 2023

கௌரவ ஆசிரியர்

**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com



# சந்திரயான்–3

## நிலவைத் தொட்ட இந்தியா!

ஜூலை 14–ம் தேதி ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஏவுதளத்திலிருந்து கிளம்பியராக்கெட் ஒன்றில் சந்திரயான்–3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலத்திலிருந்து விக்ரம் லேண்டர் வெற்றிகரமாகப் பிரிந்து நிலவை நோக்கிப் பயணம் செய்தது. ஆகஸ்ட் 23–ம் தேதி அது நிலவைத் தொட்டதும், விண்வெளி வரலாற்றில் ஒரு புதிய சரித்திரத்தை இந்தியா எழுதியது. அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை அடுத்து நிலவில் விண்கலத்தைத் தரையிறக்கும் நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. அதைவிட முக்கியம், இதுவரை யாரும் ஆராய்ந்து பார்க்காத நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கும் முதல் நாடு என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது.


சந்திரயான்–3 திட்டத்துக்காக இந்தியா செலவிட்டிருக்கும் தொகை, 613 கோடி ரூபாய். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் இஸ்ரோ அமைப்பில் பெரிய குழுவே இதற்காக இரவு பகலாக வேலை பார்த்தது.

1,750 கிலோ எடை கொண்ட விக்ரம் லேண்டர் தன் நான்கு கால்களையும் அழுத்தமாகப் பதித்து நிலவின் பரப்பில் இறங்கி நின்ற நிமிடத்தில் ஒட்டுமொத்த இந்தியாவே இந்த சாதனையைப் பெருமையுடன் கொண்டாடியது. ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சந்திரயான்–2 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கிட்டத்தட்ட இதே பகுதியில் இறங்குவதாக இருந்தது. அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத சூழலில், அது கட்டுப்பாட்டை இழந்து நிலவில் மோதி செயலிழந்தது. அந்தத் தவறிலிருந்து பாடம் கற்று, இம்முறை சாதித்துள்ளனர் நம் விஞ்ஞானிகள். ஏதேனும் ஆபத்துகள் இருந்தால் அவற்றைக் கண்டறிந்து தவிர்க்கும் தொழில்நுட்பம், அதிநவீன கேமராக்கள் என்று சகல முன்னேற்பாடுகளுடன் சென்ற விக்ரம் லேண்டர், தான் இறங்க வேண்டிய

இடத்தில் பள்ளம் இருப்பதைக் கண்டறிந்து சற்றுத் தள்ளி இறங்கியது வெற்றிகரமான க்ளைமாக்ஸ்.

விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கியபோது ஏற்பட்ட புழுதிப்படலம் அடங்கிய நான்கு மணி நேரம் கழித்து, அதன் ஒரு பக்கக் கதவு திறந்தது. அந்தக் கதவே சாய்மானப் பாதையாக மாறிவிட, அதன் வழியே பிரக்யான் என்று பெயரிடப்பட்ட ரோவர் வாகனம் வெளியில் வந்தது. இந்த ரோவர் 26 கிலோ எடையுள்ளது, ஆறு சக்கரங்கள் கொண்டது. ஒரு நொடிக்கு ஒரு சென்டிமீட்டர் தூரம் என்ற வேகத்தில் இது அங்கிருந்து நகர்ந்து சென்று இப்போது நிலவை ஆராய்கிறது.

விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் ஆகிய இரண்டிலும் ஐந்து ஆராய்ச்சிக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை பல்வேறு ஆராய்ச்சிகளை நிலவின் பரப்பில் செய்கின்றன. நிலவின் மேற்புறத்தில் வெப்பநிலை அதிகமாக இருந்தாலும், சில செ.மீ ஆழத்திலேயே வெப்பநிலை கடுமையாகக் குறைந்து மைனஸ் டிகிரிகளைத் தொடுகிறது என்று இந்த ரோவர் கண்டுபிடித்தது. நிலவின் மேற்பரப்பில் கந்தகம், ஹைட்ரஜன், ஆக்சிஜன் போன்றவை இருப்பதையும் இது உறுதி



செய்திருக்கிறது. லேண்டர் மற்றும் ரோவர் இரண்டும் அனுப்பி வைக்கும் தகவல்களும் புகைப்படங்களும் எதிர்காலத்தில் பல்வேறு நிலவுப்பயணங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும்.

இவை 14 நாட்கள் மட்டுமே செயல்பாட்டில் இருக்கும் என்பதால், ஆராய்ச்சிகள் வேக வேகமாக நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் இருக்கிறது. நிலா தன்னைத் தானே சுற்றிக்கொள்ள நம் கணக்கின்படி 29.5 நாள் ஆகிறது. அதில் சுமார் பாதி அளவான 14 நாட்கள் என்பது நிலவின் ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது. விக்ரம் லேண்டர் நிலவின் தென் துருவப் பகுதியில் இறங்கியுள்ளது. அங்கு நிலவுக் கணக்கின்படி ஒரு நாள் பகல் இருக்கும், ஒரு நாள் முழுக்க இரவு இருக்கும். விக்ரம் லேண்டர் போய் இறங்கிய ஆகஸ்ட் 23 முதல் அடுத்த 14 நாட்களும் அங்கு பகல் என்பதால் வெளிச்சம் இருக்கும். சூரிய சக்தி தகடுகள் மூலமாக மின்சாரம் தயாரித்தே விக்ரம் லேண்டரும் பிரக்யான் ரோவரும் செயல்படுகின்றன. எனவே, சூரிய வெளிச்சம் இருக்கும் 14 நாட்களும் இவை தொடர்ந்து செயல்படும்.

அதன்பிறகு 14 நாட்கள் அந்தப்பகுதி இருளில் மூழ்கிவிடும். சூரிய சக்தி மின்சாரத்தைத் தயாரிக்க முடியாது. எனவே, இந்த இரண்டுமே செயலிழந்துவிடும். அந்த இரவு நேரத்தில் –233 டிகிரி சென்டிகிரேட் வரை வெப்பநிலை தாறுமாறாகக் குறைந்துவிடும். உறையவைக்கும் இந்தச் சூழலில் அவை சேதமடையலாம். ஒருவேளை அந்த 14 நாட்கள் முடிந்து மீண்டும் வெயில் வரும்போது விக்ரமும் பிரக்யானும் சூரியசக்தி மின்சாரம் தயாரிக்க முடிந்து மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தால், அது அதிசயம்தான். அப்படி நடந்தால் மேலும் 14 நாட்கள் அவை ஆராய்ச்சியைத் தொடர முடியும். இதற்கான சாத்தியங்களும் உள்ளன.

இதனால் நமக்கு என்ன பலன் என்ற கேள்வியைப் பலர் எழுப்புவதுண்டு. இப்போது, நிலவை நெருங்க முடியும், அதில் இந்தியாவால் ஒரு லேண்டரை பத்திரமாகத் தரையிறக்க முடியும் என்ற இரண்டுமே மகத்தான சாதனைகள்தான். முதல்முறையாக இப்படி ஒரு முயற்சியைச் செய்யும் நாடு, பாதுகாப்பான இடத்தில் விண்கலத்தைத் தரையிறக்கவே ஆசைப்படும். ஆனால், நாம் யாரும் இதுவரை தொட்டுப் பார்க்காத தென் துருவத்துக்குப் போனோம் என்பதே துணிச்சலான சாதனை. அங்கிருக்கும் வளங்கள் பற்றிய ஆராய்ச்சி, எதிர்கால விண்வெளி முயற்சிகளுக்குப் பெரிதும் பக்கபலமாக இருக்கும்.

விண்வெளிக்குச் சென்று பத்திரமாகத் திரும்பிவந்து பூமியைத் தொடும் விண்கலத்தை சோதித்து வெற்றி கண்டிருக்கிறது இந்தியா. அது பயன்பாட்டுக்கு வந்துவிட்டால், இன்னும் குறைந்த செலவில் செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்பலாம், மனிதர்களையும் அனுப்பலாம். அடுத்ததாக நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தை உருவாக்கி வருகிறது இந்தியா.

எதிர்கால நிலவுப் பயணங்களுக்கும், விண்கலங்களைப் பூமிக்கு அப்பால் கொண்டு சென்று நிலைநிறுத்தும் திறனைப் பெறுவதற்கும் இந்த ஆராய்ச்சிகள் அவசியம். இதன்மூலம் வலிமையான விண்வெளி வல்லரசாக இந்தியா மாறும். இது பொருளாதாரரீதியாகவும் நம் நாட்டை உயர்த்தும். ●

# தமிழ்நாடு இழக்கும் உயர்கல்வி உதவி!

மாநில அரசுகள் நடத்திவரும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு நிதியளிக்கும் வகையில் ஒரு மிகப் பெரிய திட்டத்தை Pradhan Mantri Uchchatar Shiksha Abhiyan (PM–USHA) என்ற பெயரில் மத்திய அரசு செயல்படுத்திவருகிறது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டத்தில் சுமார் 13,000 கோடி ரூபாயை மத்திய அரசு செலவிடவிருக்கிறது. இதில் தன் பங்கைப் பெறமுடியாத நிலை தமிழகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

2013–ம் ஆண்டில் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA) என்ற பெயரில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. RUSA திட்டத்தின் கீழ் 2,500 கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் தேர்வுசெய்யப்பட்டு, 16 பிரிவுகளின் கீழ் அவற்றுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டன. இதன் காரணமாக மாணவர் சேர்க்கை, அரசுக் கல்லூரிகளின் உள் கட்டமைப்பு வசதிகள் வெகுவாக மேம்படுத்தப்பட்டன.


2020–ல் மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தியபோது இந்தத் திட்டத்தின் பெயர் பிஎம்–உஷா என மாற்றப்பட்டது. இதில் பங்குபெற தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்பது உட்பட பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. புதிய கல்விக் கொள்கையை ஏற்காத எதிர்க்கட்சிகள் ஆளும் கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட 14 மாநிலங்கள் இந்தத் திட்டத்தில் இன்னும் இணையவில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் எல்லா நடைமுறைகளுக்கும், மத்திய அரசு 60% நிதியையும் மாநில அரசு 40% நிதியையும் செலவழிக்க வேண்டும்.

PM – USHA திட்டத்தில் தமிழ்நாடு எடுக்கப்போகும் முடிவு, தமிழகத்தில் உயர்கல்வி படிக்கும் மாணவர்களின் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.



# கேட் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்!

பொறியியல் படிப்பை முடிக்கும் பட்டதாரி மாணவ, மாணவிகளுக்காகத் தேசிய அளவில் பொறியியல் பட்டதாரித் திறன் தேர்வு (கேட்) ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. 2024–ம் ஆண்டுக்கான






கேட் தேர்வு குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. இதன்படி கேட் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு வரும் செப்டம்பர் 29–ம் தேதி வரை நடைபெறும். அடுத்த ஆண்டு பிப்ரவரி 3, 4, 10 மற்றும் 11–ம் தேதிகளில் தேர்வு நடத்தப்பட உள்ளது. கணினி வாயிலாக நடைபெறும் இத்தேர்வானது ஒவ்வொரு நாளும் காலை மற்றும் பிற்பகலில் நடத்தப்படுகிறது. தேர்வு முடிவு அடுத்த ஆண்டு மார்ச் 16–ம் தேதி வெளியிடப்படும். மதிப்பெண் அட்டைகளை அதே மாதம் 23–ம் தேதி முதல் 31–ம் தேதி வரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

கேட் தேர்வு நடைபெறும் நாட்களில் வேறு எந்தத் தேர்வுகளும் நடைபெறாதபடி தொழில்நுட்பம் சார்ந்த கல்வி நிறுவனங்கள் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும் என ஏஐசிடிஇ தெரிவித்து உள்ளது.

## விருது பெற்ற நல்லாசிரியர்கள்!

இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதும் 50 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார், தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை மாலதி ஆகியோருக்கு விருது கிடைத்துள்ளது.

ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார், கிராமப்புற மாணவர்களை என்சிசியில் சேர ஊக்குவிக்கிறார். டேக்வாண்டோ, குத்துச்சண்டை, வாள் சண்டை உள்ளிட்ட விளையாட்டுகளில் மாணவர்களின் திறன்களை வளர்க்க உதவியுள்ளார். “கிராமப்புற மாணவர்களுக்குப் புதிய விளையாட்டுகளை அறிமுகப்படுத்தி, அவர்களின் திறனை வளர்த்துச் சாதிக்கவும் வைத்துள்ளது மனநிறைவைத் தருகிறது. என்னிடம் என்சிசி பயிற்சி பெற்ற மாணவர்கள் பலர் தற்போது காவல் துறை, ராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர்” என்கிறார் அவர்.


ஆசிரியை மாலதி, “பள்ளியில் ரோபோட்டிக் வகுப்பு மற்றும் வில்லுப்பாட்டு கற்றுக் கொடுத்து வருகிறேன். ரோபோட்டிக் வகுப்புக்கான உபகரணங்களை எனது சொந்த செலவில் செய்தேன். தமிழகத்தில்



மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 600 நாட்களுக்கு மேலாக ஆன்லைன் வகுப்பு நடத்தி உள்ளேன். போட்டித் தேர்வுக்கான புத்தகம் எழுதியுள்ளேன். ரூ.1 லட்சம் மதிப்பிலான அந்தப் புத்தகங்களை தென்காசி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கியுள்ளேன். எனது உழைப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது” என்கிறார்.

## கணிதத்தில் ஆர்வம் இல்லை!

தமிழகத்தில் 164 அரசுக் கலை அறிவியல் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. இந்தக் கல்லூரிகளில் இளநிலைப் படிப்புகளில் ஒரு லட்சத்து 11,300 இடங்கள்



உள்ளன. இந்த ஆண்டுக்கான சேர்க்கை முடிந்த நிலையில், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் காலியாகவே உள்ளன. பல கல்லூரிகளில் கணிதப் பாடப்பிரிவில்தான் காலியிடங்கள் அதிகம் உள்ளன.

“கொரோனா காலகட்டத்துக்குப் பிறகே இந்தப் பிரச்னை அதிகமாகியுள்ளது. அந்த நாட்களில் பள்ளிக்குப் போகமுடியாத மாணவர்கள் பலரும் கணிதத்தில் பின்தங்கினர். குறைந்தபட்சமாக பாஸ் செய்தால் போதும் என்று படித்தனர். பள்ளியில் கணிதம் ஒரு பாடமாக மட்டுமே இருந்தது. கல்லூரியில் அதை முழுவதுமாகப் படிக்க பயப்படுகின்றனர்.

பள்ளிகளில் கணித ஆசிரியர்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் முழுமையாக கற்றுக்கொள்ள முடியவில்லை. உயர்நிலை வகுப்புக்கு வரும்போது, அடிப்படைக் கணிதம்கூடத் தெரியாமல் சிரமப்படுகின்றனர். இதையடுத்து கல்லூரிக்கு வரும் மாணவர்கள் கணிதத்தைப் பார்த்தாலே ஓடுகின்றனர். கணிதம் படிப்பதன் மூலம் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்” என்கிறார்கள் அக்கறையுள்ள பேராசிரியர்கள். ●

# தூக்கத்தை

## தூக்கி எறியக்கூடாது!

குழந்தைப் பருவத்தைத் தாண்டிய ஒரு சராசரி மனிதர் தினமும் 7 முதல் 8 மணி நேரம் தூங்க வேண்டும் என்பது மருத்துவர்கள் செய்யும் பரிந்துரை. ஆனால் வாழ்க்கைமுறை மாற்றம் நமது தூக்கத்தையும் குறைத்துவிட்டது. ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி போலவே தூக்கமும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையான தேவை என்பது பலருக்கும் புரிவதில்லை. நூறு ஆண்டுகளுக்கு முன்பு சராசரி மனிதனின் தூக்கம் 9 மணி நேரமாக இருந்தது. இப்போது அது 6 மணி நேரமாகக் குறைந்திருக்கிறது. தூங்கும் நேரத்தை நாமாகத்தான் இப்படிக் குறைத்துக் கொண்டிருக்கிறோம். காரணம், மாறிவிட்ட வாழ்க்கைமுறை.

இந்தியாவில் 100 பேரில் 10 பேர் மட்டுமே ஆரோக்கியமாகத் தூங்குகிறார்கள். மீதமுள்ள 90 பேருக்கு நல்ல தூக்கம் என்பது எதுவென்று தெரியவில்லை; தூக்கமின்மை என்பது ஒரு குறை என்பதையும் அவர்கள் அறியவில்லை. முன்பைவிட இப்போது நமக்கு வேலை நேரம் அதிகம். எந்நேரமும் தொடர்புகொள்ள எல்லாரிடமும் செல்போன் இருக்கிறது. பொழுதுபோக்கவும் ஏகப்பட்ட வாய்ப்புகள் வந்துவிட்டன. எதை விட்டுக்கொடுப்பது என்கிற கேள்வி வரும் போது, தயங்காமல் தூக்கத்தைத் தூக்கி எறிகிறோம். தூக்கம் குறைந்தால் படபடப்பு, மன உளைச்சல், டென்ஷன் எல்லாம் அதிகமாகும். அதன் விளைவாக உடல் பருமன், சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், இதயக் கோளாறுகள், பக்கவாதம் போன்றவை வரலாம்.



தூக்கம் என்பது, நாள் முழுக்க உழைத்துக் களைத்த உடலுக்கு அளிக்கும் ஓய்வு. தூக்கத்திற்கும் உடல்நலனுக்கும் நேரடித்தொடர்பு உள்ளது. தூங்குவதற்கும் சில விதிமுறைகள் உண்டு. அதில் முதன்மையானது, நேரம் தவறாமை. தினமும் சரியான நேரத்திற்குத் தூங்கச் செல்ல வேண்டும். குறைந்தபட்சம் தினமும் 8 மணி நேரமாவது உறங்க வேண்டும்.

### நல்ல தூக்கம் எது? எப்படித் தூங்க வேண்டும்?

❖ தூங்கி எழுந்தவுடன் அதிகாலை வெயில் நம் உடலில் பட வேண்டும். வெயில் நம் உடலுக்கும் மனதுக்கும் புதுப் பொலிவைத் தருவதுடன், நல்ல உறக்கம் வருவதற்குக் காரணமாகவும் இருக்கிறது.

❖ காபி, டீ அதிகம் குடிக்கக் கூடாது. ஒரு நாளில் பத்து, பதினைந்து முறை டீ, காபி சாப்பிடுவர்கள் உண்டு. அவ்வாறு அதிக முறை காபியோ அல்லது டீயோ சாப்பிடுபவர்கள் நிச்சயம் தூக்கம் சம்பந்தமான நோய்களைச் சந்திப்பார்கள். காபி, டீ அதிகம் சாப்பிடும்போது மூளை முடுக்கிவிடப்படுவதால், அதனால் ஓய்வெடுக்க முடிவதில்லை. அதுவே தூக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

❖ மாலை நேரத்தில் குளித்தால் ஒரு சிலருக்கு இரவில் நல்ல தூக்கம் வரும். இரவில் குளியல் என்பது

உடலுக்கு உற்சாகம் தருகிறது என்பது சிலரது நம்பிக்கையும் வழக்கமாகவும் இருக்கிறது. பழக்கப்பட்டவர்களுக்கு இது சரிதான். ஆனால், தூங்குவதற்கு முன்பு குளிக்காமல் இருந்தாலும், நல்ல தூக்கம் தடைபடாது.

❖ உறங்குவதற்கு முன்பு என்ன சாப்பிடுகிறோம், அதை எப்படிச் சாப்பிடுகிறோம் என்பது மிக மிக முக்கியம். இரவில் மிதமான அளவில் உணவை எடுத்துக்கொள்வதே சிறப்பு. இரவு உணவுக்குப் பிறகு ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ கழித்து தூங்கப் போவதுதான் நல்லது.

❖ இரவில் உணவுக்குப் பின் வாழைப்பழம் மற்றும் தேன் எடுத்துக்கொள்ளலாம். இவற்றில் செரடோனின் என்கிற வேதிப் பொருள் இருப்பதால், நல்ல தூக்கத்தை வரவழைக்கும்.

❖ வேலைக்குப் போனாமா, வீட்டிற்கு வந்தோமா, சாப்பிட்டோமா, உறங்கினோமா என்று ஒரு மெஷின் போல வாழ்க்கையை நகர்த்தாதீர்கள். வேலை முடிந்து ஓய்வாக இருக்கும் நேரங்களில் மனசுக்குப் பிடித்த ஏதாவதொன்றில் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நல்ல தூக்கத்திற்கு மன அமைதியும் முக்கியம்.

❖ தூங்குகிற இடம் வசதியாகவும் பிடித்தமானதாகவும் இருப்பது நல்லது. வசதி என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபடும். ஒரு சிலருக்கு உயரமான கட்டிலில் தூங்குவது வசதியாக இருக்கும்; சிலருக்கு தரையில் படுத்தால்தான் தூக்கம் வரும். சிலருக்குக் காற்றோட்டமான, விசாலமான அறையில் படுத்துத் தூங்குவதுதான் வசதி என்றிருக்கும். அறை வெப்பநிலையையும் கவனிக்க வேண்டும்.

❖ இரவில் உறங்கும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், இருட்டு. இருட்டில்



இருக்கும்போது நம் உடலில் மெலட்டோனின் என்கிற வேதிப் பொருள் சுரக்கும். எனவே கும்மிருட்டில் தூங்குவதுதான் நல்லது. ஒரு சிலர் மங்கலான இரவு விளக்கு வெளிச்சத்தில் உறங்குவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். அதுகூடச் சரியானதுதான். ஆனால், பிரகாசமான வெளிச்சத்தில் தூங்குவது தவறு.

❖ எப்போதும் குப்புறப் படுத்துத் தூங்குதல் கூடாது. வயிற்றுப் பகுதி அழுத்துவதால் சுவாசிக்கும் காற்றில் பற்றாக்குறை ஏற்பட்டு தூக்கம் கலைய வாய்ப்புள்ளது. குப்புறப் படுத்துத் தூங்கினால் நிம்மதியான தூக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது.

❖ உறங்கும்போது குறட்டை விடும் வழக்கம் உள்ளவர்கள் மல்லார்ந்து படுத்து உறங்குவதைத் தவிர்க்க வேண்டும். குறட்டை விடும்போது அதிகமான காற்று உள்ளிழுக்கப்பட்டு உடல்நலக்கோளாறு நிகழலாம்; அல்லது அதிகமாக சுவாசித்தல் நிகழக் கூடும். ஆகவே உறக்கத்தில் குறட்டை விடுபவர்கள் ஒரு பக்கமாக ஒருக்களித்துத் தூங்குவதுதான் நல்லது.

❖ குழந்தைகளும், கர்ப்பிணிகளும்கூட இப்படி ஒரு பக்கமாக ஒருக்களித்துப் படுத்துத் தூங்குவதுதான் நல்லது. மல்லார்ந்து படுக்கவோ அல்லது குப்புறப் படுத்துத் தூங்குவதோ கூடாது.

❖ ஒரு சிலர் இரவு மிகத் தாமதமாகத் தூங்குவதைப் பழக்கமாகக் கொண்டிருப்பார்கள்; அல்லது வாரத்தில் பல நாட்கள் இரவில் சில மணி நேரம் மட்டுமே தூங்கிவிட்டு, ஞாயிற்றுக்கிழமை மட்டும் மதியம் வரை தூங்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். இந்த இரண்டுமே ஆபத்துதான். தினமும் சரியான நேரத்தில் தூங்கி, சரியான நேரத்தில் எழுவது என்பது மிக மிக முக்கியம். தூக்கம் விஷயத்தில் ஒழுக்கம் தேவை.

❖ மதிய சாப்பாடு உள்ளே போனதும் ஒரு குட்டித் தூக்கம் போடுகிற சுகம் பலருக்கும் பிடித்தமான ஒன்று. அந்தக் குட்டித் தூக்கம் 1 மணி நேரத்தைத் தாண்டாதவரை பிரச்னை இல்லை. அதைத் தாண்டினாலோ, இரவுத் தூக்கத்தை அது பாதித்தாலோ அதைத் தவிர்ப்பது நல்லது. ●

# எங்கும் எதிலும் வேண்டாம் ஈகோ!



சக மனிதர்களுடன் இணைந்து பழகும்போது அன்பு, நட்பு போன்ற நேர்மறை உணர்வுகள் உருவானாலும், மனதுக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் பல மிருகங்களும் தலைதூக்கிப் பார்க்கின்றன. கோபம், வெறுப்பு மற்றும் ஈகோ போன்ற உணர்ச்சிகள் எழுந்தால், அவை ஒருவரை உள்ளிருந்து பாதிக்கும். பணியிடங்களில் ஊழியர்களுக்கு மத்தியில் ஈகோ தலைதூக்குவதை நிறுவனங்கள் விரும்புவதில்லை. எதிர்மறை உணர்வுகள் என்ற மிருகம் தலைதூக்காமல் இருக்கவும், வேலையிடத்தில்நிலவும்ஈகோவை சமாளிப்பதற்கான வழிகள் குறித்தும் விளக்கம் அளிக்கிறார் ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர் எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்.




ஈகோ என்பது எப்படி உருவாகும்? உங்களது முக்கியத்துவம் பற்றி உங்களுக்குள் இருக்கும் ஓர் உணர்வு இது. பல்வேறு காரணங்களால் இது இயக்கப்படுகிறது. மனித நடத்தை, மனதின் மூன்று பகுதிகளுக்கு இடையிலான தொடர்புகளின் விளைவாக ஏற்படும். ஆளுமையின் பழமையான உள்ளுணர்வுக் கூறு ஒவ்வொருவருக்கும் பிறக்கும்போதே இருக்கும். இது ஆளுமையின் அனைத்து மரபுக் கூறுகளையும் கொண்டுள்ளது. யதார்த்த ஆளுமைக்கும், வெளிப்புற நிஜ உலகத்துக்கும் இடையே சமன் செய்ய ஈகோ உருவாகிறது. சூப்பர் ஈகோ, பிறரிடம் கற்றுக்கொண்ட சமுதாயத்தின் மதிப்புகள் மற்றும் அறநெறிகளை ஒருங்கிணைக்கிறது.

ஈகோ சூழ்நிலைக்கும் இடத்துக்கும் ஏற்றபடி வெளிப்படும். ஆனால், ஈகோவை வெளிப்படுத்துவதால் உங்களது வாழ்க்கையில் எந்த வளர்ச்சியையும் எட்ட முடியாது. சக மனிதர்கள் மத்தியில் உங்களது மதிப்பை இது குறைக்கும். நிறுவனங்களில் எந்தப் புது விஷயத்தையும் கற்றுக்கொள்வதற்கும், புதிய மனிதர்களுடனான நட்புக்கும் எதிராக இது அமையும்.

ஈகோ என்பது வீட்டில் தொடங்கி எங்கும் பரவி நிறைந்துள்ளது. அந்தந்த இடத்துக்கு ஏற்ப இதனை நிர்வகிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். வேலைக்குச் செல்லும் ஒருவர் நமக்கு ஏன் வம்பு என்று நினைத்துக்கொண்டு, மற்றவர்களைத் தவிர்ப்பதன் மூலம் இதற்குத் தீர்வு காண முடியாது. ஈகோவுடன் நம்மை அணுகுபவர்களின் வெளிப்பாடுகள் எப்படியிருக்கும் எனச் சக மனிதரின் ஈகோவைப் புரிந்துகொள்வது அவசியம். அப்போதுதான் அதனை எளிதில் சமாளித்து நாம் நிம்மதியாக இருக்க முடியும். சக பணியாளர்கள் என்னென்ன விதங்களில் தங்களது ஈகோவை வெளிப்படுத்த முடியும் என்பதைப் பார்ப்போம்.




ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர்

**எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்**

## நற்பெயரை அபகரித்தல்:

நீங்கள் செய்யும் வேலைகளைத் தனது சாதனைகளாகக் காட்டி, மேலதிகாரியிடம் தான் புகழ் பெறுவதில் கவனமாக இருப்பார்கள் சிலர். அவர்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் இதற்காகத் துளியும் வெட்கப்படுவதில்லை. அவர்கள் என்னென்ன தந்திரம் செய்வார்கள் என்பதை முன்கூட்டியே கண்டறிவது அவசியம். அவர்களுக்கு அளிக்கப்படும் வேலையின் பெரும்பகுதியை நீங்கள் செய்திருக்கலாம். அவர்களோ வேலைக்கான பிரசன்டேஷனில் கலந்துகொண்டு, எல்லா வேலைகளையும் தானே செய்தது போலக் காட்டிக்கொண்டு புகழைத் தட்டிச் செல்வதைப் பார்க்கலாம். இவர்களை அடையாளம் கண்டு கொண்டு கவனமாக இருப்பதும், உங்களுக்கான வேலைகளைச் சரியாகச் செய்வதும், தான் பெயர் வாங்க மற்றவர் உங்கள் மீது சுமத்தும் வேலைகளைத் தவிர்க்கக் கற்றுக்கொள்வதும் அவசியம்.

## கையாளும் தந்திரம்:

ஈகோ பிடித்தவர்களின் பலியாடாக நீங்கள் இருப்பது நல்லதல்ல. அதே சமயம் பதிலுக்கு நீங்களும் ஈகோவை வெளிப்படுத்தினால் மிகப்பெரிய பிரச்னையில் முடியும். அது உங்களுக்கு அருகிலேயே பகை நெருப்பை வளர்ப்பதற்குச் சமம். இவர்களுக்கு எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக நீங்கள் செய்யும் வேலையை வெளிப்படையாகச் சொல்லுங்கள். உங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் ஆர்வமாக இருங்கள். அதைப் பற்றித் தயக்கமின்றிப் பேசுங்கள், உங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள். உங்களது வேலைக்கு யாராவது பாராட்டு வாங்க முயன்றால் அனுமதிக்காதீர்கள்.

## பயம்கொள்ள வேண்டாம்:

ஒரு சிலர் எந்த வேலையும் செய்யமாட்டார்கள். வேலைக்கான சந்தர்ப்பம் வரும்போதும், அதை யார் தலையில்சுமத்தலாம்என்றுபார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் தந்திரமாக நடந்துகொள்வதுடன் ஈகோ நிறைந்த உரையாடலையும் வெளிப்படுத்தலாம். கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களைத் தோற்கடிக்க முயற்சி செய்வார்கள். அவர்களது யோசனைகளையும், பரிந்துரைகளையும் தவிர்த்துவிட்டு உங்களது வேலையைத் தொடரலாம். ஒருவேளை அவர்கள் உங்களை விட அதிகாரம் மிக்கவர்களாக இருந்தால் அவர்களின் மிரட்டலுக்கு ஆளாகலாம். அவர்களது செயல்கள் உங்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கும். அவர்களது செய்கையால் மனப் பதற்றத்துக்கு ஆளாகாமல், உங்களது வேலையில் கவனம் செலுத்துவதும், கூடுதலாக உங்களது திறமையை வளர்த்துக்கொள்வதும் அவசியம்.

## வதந்திகளைச் சரிசெய்யலாம்:

நம்மைப் பற்றிய வதந்தியை யார் வேண்டுமானாலும் பரப்பலாம். நம்மிடம் நட்பாகப் பழகக்கூடிய ஒருவரிடம் நம்மைப் பற்றிய பெரும்பாலான விஷயங்களைப் பகிர்ந்துகொள்வோம். ஏதோ ஒரு தருணத்தில் உங்களது வளர்ச்சியின் மீது அவர்களுக்கு பொறாமை ஏற்படும் பட்சத்தில், அவர்களே உங்களது பர்சனல் விஷயங்கள் மற்றும் திறமை குறித்த வதந்திகளைப் பரப்பலாம். அவர்கள் பொய் சொன்னாலும், உங்களோடு இதுவரை நெருக்கமாக இருந்தவர் என்பதால், அவர் சொல்வதைப் பலரும் நம்ப வாய்ப்புள்ளது.



இதையும் கண்டுபிடிக்கலாம். உங்களது மேலாளர் உங்களிடம் வழக்கத்தைவிட இறுக்கமாக நடந்துகொண்டால். சக பணியாளர்கள் உங்களிடமிருந்து விலகிச் சென்றால், ஏதோ நடந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். உங்கள் மேலதிகாரியிடம் பிரச்னை என்ன என்பதை நேரடியாகக் கேட்டு அதற்கான விளக்கம் அளித்து சரி செய்துகொள்ளுங்கள்.

எந்த இடத்திலும் நீங்கள் ஈகோ இல்லாமல் இயல்பாக இருங்கள். உங்கள் இடத்தை யாராலும் பிடிக்க முடியாது. ஈகோ என்ற மிருகம் தலைதூக்கிப் பார்க்கும்போது அதன் தலையில் குட்டி அமைதியாக்குங்கள். அடுத்தடுத்து உங்களது திறனை மேம்படுத்திக்கொள்வதன் மூலம் மற்றவர்களின் ஈகோவால் உங்களது வளர்ச்சி பாதிக்காமல் பார்த்துக்கொள்ளலாம்.

**– யாழ் ஸ்ரீதேவி**



# மாத்தி யோசித்து நட்பைக் காப்பாற்றுங்கள்!

மாயாவும் மீனாவும் அதிக நட்புதான்னு எட்டாங்கிளாஸ்ல பேசிப்பாங்க. அவுங்க ஒண்ணாத்தான் பஸ்ல உக்காருவாங்க, ஒண்ணாத்தான் லஞ்ச் சாப்பிடுவாங்க, ஒண்ணாத்தான் விளையாடுவாங்க.

மீனா பிறந்தநாளுக்கு மாயா ஒரு ஜோடி கம்மல் பரிசா கொடுக்குறா. அது சாதாரணமா கடையில விக்கற பிளாஸ்டிக் கம்மல். அந்தக் கம்மல்ல ரெண்டு பூக்கள் இருக்கு. ஒரு பூ மஞ்சக் கலர்ல இருக்கு. அதுக்குள்ள இன்னொரு பூ ஊதா கலர்ல இருக்கு. மஞ்சளும் ஊதாவும் சேர்ந்தா ரொம்ப ரொம்ப அழகா இருக்கும்.

அப்படி மாயா கொடுத்த கம்மல் மீனாவுக்கு ரொம்ப பிடிச்சிருச்சி. அதை ஆசையா போட்டுக்குறா. விளையாட்டு வகுப்பு முடிஞ்சி கணித வகுப்பு ஆரம்பிக்கும்போது மாயா அதைக் கவனிக்கிறா. “ஏய் மீனா, உன் கம்மல்ல இருந்த குட்டி ஊதாப்பூ எங்கே?”

உடனே மீனா தொட்டுப் பாக்குறா. அப்புறம் கழட்டிப் பாக்குறா. ஆமா, ஊதாப்பூ அங்க இல்ல. அச்சச்சோன்னு இருக்கு. அப்ப மணி அடிக்குது. வகுப்ப விட்டு வெளிய வந்து மீனா கிரவுண்ட் முழுக்க, தன்னோட கம்மல்ல இருந்த ஊதாப்பூவ தேடுறா. முடிவா ஒரு இடத்துல அத கண்டுபிடிச்சி எடுத்துட்டு ஓடி வர்றா.

மாயா அமைதியா இருக்கா. ஆனா அவளுக்குள்ள கோபம் இருக்கு. மீனா வந்து, ‘‘மாயா, பாரு... ஊதா பூவ எடுத்துட்டேன்’’னு சொல்றா. ‘‘ஆனா அதை இப்போ என்ன செய்வே? இதே இது தங்கக்கம்மலா இருந்தா நீ கவனமா பாத்திருப்பதான மீனா”ன்னு கேக்கறா.

‘‘இல்ல மாயா, தெரியாம விழுந்துடுச்சு”ன்னு சொல்றா மீனா.

“இனிமேல் நீ என்கூடப் பேசாத மீனா!”

“மாயா, லூசு மாதிரி பேசாத. நான் வேணுமின்னா தொலைச்சேன். என்ன பெரிய பரிசு கொடுத்துட்டன்னு இப்படி சீன் போடுற?”



மீனா இப்படி கத்தும்போது அங்க ரெண்டு ஆசிரியர்கள் பேசிக்கிட்டே கடந்து போக, அவுங்க போற வரைக்கும் அமைதியா இருக்காங்க. அந்த ஆசிரியர்கள், ‘‘எல்லாரும் ஒரே மாதிரி செஸ் விளையாடும்போது அமெரிக்காவுல உள்ள பாபி பிஷர் மட்டும் சிப்பாயை வெச்சே வித்தியாசமா செஸ் விளையாடுவாராம்’’னு பேசிக்கிட்டுப் போறாங்க.

ஆசிரியர்கள் போனதும் மாயாவும் மீனாவும் கோபத்துல முறைச்சிட்டுப் பிரிஞ்சி போயிடறாங்க. வழக்கமா வெள்ளிக்கிழமை சாயங்காலம் மாயாவும் மீனாவும் ரொம்ப சந்தோஷமா பேசி சிரிச்சி டாட்டா சொல்லிப்பாங்க. ஆனா இன்னைக்குச் சண்டை வந்தாச்சு. வெள்ளிக்கிழமை இரவு மாயாவும் தூங்கல, மீனாவும் தூங்கல. தான் செய்ததுதான் நியாயம்னு ரெண்டு பேரும் நினைச்சிக்கிறாங்க.

சனிக்கிழமை காலையில ரெண்டு பேருக்கும் ஒரே நேரத்துல அந்த ஆசிரியர்கள் பாபி பிஷர் செஸ்ல வித்தியாசமா செய்தாருன்னு சொன்னது நினைவுக்கு வருது. ‘மீனா மேல வர்ற கோபத்த கொஞ்சம் வித்தியாசமா நினைச்சிப் பாத்தா என்ன. மீனா வேணும்னே நான் கொடுத்த பரிச தொலைக்கல. பிறகு எதுக்கு அவ மேல கோபப்படுறோம்’னு மாயா நினைக்கிறா. அதே நேரம் மீனாவும், ‘மாயா மேல வர்ற கோபத்த கொஞ்சம் வேற கோணத்துல நினைச்சிப் பாத்தா என்ன? மாயா அதை ரொம்ப அன்பா பாத்து பாத்து ரசிச்சி வாங்கிக் கொடுத்திருக்கலாம். அத தொலைச்சதுக்கு கோபப்படுறான்னா அதுவும் ஒரு வகை அன்புதான்’னு நினைக்கிறா.



அந்த உடைஞ்ச கம்மல எடுத்து, மஞ்சள் பூவுக்கு நடுவுல ஊதா பூவ வைக்கலாம்னு நினைக்கிறா. கடைக்குப் போய் பசை வாங்கிட்டு வந்து ஒட்டுறா. காய்ஞ்ச பிறகு எடுத்துப் பாக்குறா. ஊதாப்பூ ஒட்டவே இல்ல. அதே நேரத்துல மாயாவுக்கு ஒண்ணு தோணுது. மீனாவுக்கு அதே மாதிரி இன்னொரு கம்மல் வாங்கிக் கொடுத்திடலாம்னு அதே கடைக்குப் போறா. கடைக்காரர் அதே மாதிரி கம்மல் இல்லன்னு சொல்றாரு.

இந்தச் சமயத்துல மீனாவுக்கு மாயாவ பாக்கனும் போல இருக்கு. மாயாவுக்கும் மீனாவ பாக்கனும் போல இருக்கு. மீனா எப்படி இந்தக் கம்மல ஒட்ட வைக்கிறதுன்னு அம்மா, அப்பா, பக்கத்துவீட்டு அக்கான்னு எல்லார்கிட்டயும் கேக்குறா. மாயா அதே மாதிரி கம்மல் கிடைக்குதான்னு கடை கடையா அலையுறா.

மீனாவுக்கு ஒரு ஐடியா தோணுது. மாயாவுக்கு ஒரு ஐடியா தோணுது. மீனா ஒரு ஊதா நூல்கண்டு வாங்குறா. ஒரு சின்னக் கம்பிய மெழுகுவர்த்தில காட்டி மஞ்சள் கம்மல்ல சின்ன ஓட்டை போடுறா. இப்போ நூலால கண்ணுக்குத் தெரியாதபடி மஞ்சள் பூவையும், ஊதாப் பூவையும் சேர்த்து அழகா கோர்த்து இறுக்கமா வெச்சிடறா.

மாயா முதல்ல கம்மல் வாங்கின கடைக்கே போறா. கடையில கூட்டம் குறைஞ்சதும், தான் ஏன் அதே கம்மல் வேணும்னு கேட்டேங்கிற நட்புக் கதைய உருக்கமா சொல்றா. கடைக்காரர் அதைக் கேட்டு உருகிப்போறாரு. அவர் மொத்தமா கம்மல் வாங்குற பெரிய கடைக்காரருக்கு போன் போடுறாரு. விவரம் சொல்லி கம்மல அனுப்பச் சொல்றாரு. அப்புறம் மாயாகிட்ட திரும்பி, “அவரு ஹோல்சேல் பிசினஸ் பண்றார். அவரோட டெலிவரி பையன் இன்னைக்கு ராத்திரிதான் அந்தக் கம்மல கொண்டுவந்து கொடுப்பார். நீ நாளைக்கு காலையில உன் அப்பாவ கூட்டிட்டு என் வீட்டுக்கு வந்து கம்மல வாங்கிக்க, நாளைக்கு ஞாயித்துக்கிழமை கடை லீவ்’’னு சொல்றார்.

மாயா நன்றி சொல்லி துள்ளிக் குதிச்சிப் போறா. மறுநாள் காலையிலயே அவ அப்பாவ எழுப்பிவிட்டு தொந்தரவு பண்றா. அப்பாவோட பைக்ல கடைக்காரர் வீட்டுக்குப் போறா. “இவ்வளவு சீக்கிரமா வந்தாச்சா. அவ்வளவு பிடிக்குமா உன் ஃபிரெண்ட’’ அப்படின்னு சொல்லி மஞ்சள் ஊதா கம்மல கொடுக்கிறார் கடைக்காரர்.

ஞாயிறு இரவும் மீனாவால தூங்க முடியல. மாயா கிட்ட மன்னிப்புக் கேட்டு கம்மல சரி பண்ணினத காட்டனும்னு நினைக்கிறா. மாயாவாலயும் தூங்க முடியல. ‘நான் புதுசா வாங்கிட்டேன் மீனா. அன்னைக்கு உன்ன கத்தினது தப்புன்னு மன்னிப்புக் கேட்டுக்கனும்’னு நினைக்கிறா.

பாபி பிஷர் மாதிரி கொஞ்சம் மாத்தி யோசிக்கும்போது அவுங்களால அவுங்க நட்ப காப்பாத்திக்க முடியுது. வெள்ளி இரவு எந்த நட்பால அவுங்க மனசு சோகமா இருந்திச்சோ, அதே நட்பால ஞாயிறு இரவு அவுங்க மனசு செம்ம ஜாலியா இருக்கு.

**– விஜயபாஸ்கர் விஜய்**

# உயர்கல்வி...

## சாத்தியங்களும் சவால்களும்!



புதிய பகுதி 1

க.சசிகலா

தமிழ்நாட்டில் மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் (GER) 51.4% (ஆதாரம்: தமிழ்நாடு அரசு, உயர்கல்வித் துறை 2021). அதாவது 18 – 23 வயதுக்குட்பட்டோரில் 51.4% பேர் ஏதேனும் ஒருவகை உயர்கல்விப் படிப்பைப் பயில்கின்றனர். இது தேசிய சராசரியான 27.1% என்ற அளவைவிட இரண்டு மடங்கு அதிகம். மேலும் இந்த விகிதமானது பல வளர்ந்த மேற்கத்திய நாடுகளைவிட அதிகம். உயர்கல்வி பயிலும் பெண்களின் தேசிய சராசரியான 27.3% என்ற அளவுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் பெண்களின் GER 51% ஆக உள்ளது.

அதே சமயம் தமிழ்நாட்டில் பட்டியல் வகுப்பைச் சார்ந்த ஆண்களில் 38.8% பேர், பெண்களில் 40.4% பேர் உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் இந்த விகிதங்கள் இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, மிகச் சிறந்த வளர்ச்சியின் குறியீடாக வெளிப்படுகின்றன. அதற்குத் தொடர்ச்சியாகச் சமூக நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தும் தமிழகத்தின் ஆட்சிகளே காரணம் என்பது வெளிப்படையாகத் தெரியும். பல நிர்வாக அளவீட்டுக் குறியீடுகளிலும், குறிப்பாக மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

தமிழகம் முழுக்க இருக்கும் மாணவர்கள் கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் அளவுக்குப் பரவலாகப் பெரும்பாலான இடங்களில் அரசுக் கல்லூரிகள் அமைந்திருப்பது ஒரு பலம். இதைத் தாண்டி, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இலவசக் கல்வி வழங்குதல், முதல் தலைமுறையாகக் கற்பவர்களுக்குக் கல்விக் கட்டணத் தள்ளுபடி, பாலிடெக்னிக் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்குதல் போன்ற திட்டங்களால் அடுத்தடுத்து அமைந்த தமிழக ஆட்சிகள் உயர்கல்வியின் சாத்தியங்களை விரிவுபடுத்திக்கொண்டே சென்றன. இவற்றைக் கடந்து, சமூகநீதிக்கேற்ப பட்டியல்படுத்தப்பட்ட சாதியினருக்கு (BC, MBC, SC, ST) கல்வி நிறுவனங்களில், அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டைச் சாத்தியப்படுத்தியதால் தொடர்ச்சியான சமூக முன்னேற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

உயர்கல்வியைச் சனநாயகப்படுத்துதல் என்கிற உயரிய இலக்கைத் திராவிட இயக்கங்கள் உறுதியாகச் சாத்தியப்படுத்தியுள்ளன. அதனால்தான் ஒன்றியத்தின் சிறப்புநிலை உயர்கல்வியில் உள்ள ஒருபக்கச் சார்புத்தன்மையை விமர்சிக்கும் விதமாகத் தமிழ்நாட்டின் பல முனைகளிலிருந்தும் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. 69 சதவிகித இடஒதுக்கீட்டை நிலைநிறுத்தி, உயர்கல்வி நிறுவனங்களில் உறுதியாக எல்லாச் சமூகங்களுக்கும் வாய்ப்பளிப்பது மற்றொரு முக்கியமான முயற்சியாகும்.

இப்படியான அரசு முன்னெடுக்கும் சாத்தியங்கள் ஒருபுறம் இருக்க, 'களத்தில் அவர்களுக்கான வேலைவாய்ப்புகள்' என்கிற பெரிய கேள்வி நம் முன் எழுந்து நிற்கிறது. 2021–ம் ஆண்டின் இந்தியத் திறன் பகுப்பாய்வு அறிக்கை, தமிழ்நாட்டில் மாணவர்களின் உயர்கல்வி சாத்தியங்களுக்கு ஏற்ற அளவுக்கு இல்லாமல், வேலைவாய்ப்பில் பற்றாக்குறை இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

பகுப்பாய்வுச் சிந்தனை (Critical thinking) மற்றும் கணினித்திறன் பெற்ற மாணவர்களைக் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் இந்தியாவில் தமிழ்நாடு எட்டாவது இடத்தில்தான் உள்ளது. ஆங்கில மொழித்திறனோடுதயார்நிலையிலுள்ளமாணவர்களைக் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் மட்டுமே உள்ளது. மேலும், பெண்களுக்கான வேலைவாய்ப்பை அளிப்பதில் எட்டாவது இடத்தில் உள்ளது, அதே நேரம் ஆண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகளவில் கிடைத்துள்ளதையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

'பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் குறைவு, சந்தையிலுள்ள வேலைகளுக்கு ஏற்ற திறன் கொண்டவர்களாக அவர்கள் உருவாக்கப்படவில்லை' என்கிற இரண்டுமே நிச்சயம் களையப்பட வேண்டிய காரணங்களே ஆகும். அதற்கான சமூக, பொருளியல், அரசியல் நிலையினைக் கண்டறிய வேண்டும்.

1990–களில் உலகமயமாக்கலுக்கான கதவுகள் இந்தியாவில் விரியத் திறந்துவிடப்பட்டன. முந்தைய தலைமுறைப் பட்டதாரிகள் ஒரே வேலையில் கவனம் செலுத்தினால், அதிலேயே அவர்கள் வேலைவாய்ப்பையும் பெற்று அடுத்த கட்டத்திற்கு சென்றுவிடுவர். ஆனால் உலகமயமாக்கலுக்குப் பிறகான வேலைவாய்ப்புகள் பன்முக ஆற்றல் (Multi–Tasking) கொண்டவர்களுக்கே சாத்தியமாகின்றன. அவற்றுக்குத் தேவையான அளவில் 'பல நிறுவனங்களில் இளைய தலைமுறையினர் பயிற்சி பெறும் அளவுக்கு' அரசு முதலீடு அமையவில்லை என்பதைக் கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

அரசின் கலை – அறிவியல் கல்லூரிகள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் படித்து முடித்து வெளியே வருகிற மாணவர்களிடம் 'வேலைக்கேற்ற திறன் இல்லை, ஏனெனில் கல்வியின் தரம் சரியில்லை' என்கிற வாதம் முன்வைக்கப்படுகிறது. இந்த வாதம் சரியே என்றாலும், அது B.Tech, M.Tech போன்ற பட்டப் படிப்புகளுக்கும் பொருந்தக்கூடியதே ஆகும். உண்மையில் சமூகநீதியின் அடுத்தகட்ட பாய்ச்சலாகிய தனியார் துறையில் இடஒதுக்கீடு என்பதே இப்பிரச்னையை முழுமையாக எதிர்கொள்ள சரியான வழியாகும். ஒருவேளை அரசுக் கல்வி நிறுவனங்களில் பயின்று வந்தவர்கள் சந்தைக்குத் தேவையான அளவில் திறனுள்ளவர்களாக இல்லையெனில், அந்தப் பற்றாக்குறையைப் போக்கும் கடமை அரசுக்குரியதே ஆகும்.

அது எப்போது சாத்தியமெனில் அரசின் சமூகநீதிக் கொள்கையைத் தனியார் துறை ஏற்கும்போது மட்டுமே சாத்தியம். இல்லையெனில் 'திறமையாளருக்குத் தட்டுப்பாடு' எனத் தனியார் துறையினர் கூப்பாடு போடலாம்; தீர்வு கிடைக்காது. சமூகநீதிப் பயனாளிகளை மட்டந்தட்டிப் பேசியதாக மட்டுமே தமிழ்நாட்டுப் பொதுச்சமூகம் இதைப் புரிந்துகொள்ளும்.

'தகுதியில்லை' என்கிற காரணத்தை முன்வைத்து, அதற்காக NEET போன்ற நுழைவு மற்றும் தகுதித் தேர்வுகளை அறிமுகப்படுத்தி, 'தகுதியானவர்களையே எடுக்கிறோம்' என்கிற வாதம் முன்வைக்கப்படுமேயானால் கல்வியின் அடிப்படைத்தன்மையே (தகுதிப்படுத்துவதுதானே கல்வியின் அடிப்படையான நோக்கம்) அடிபட்டுப் போய்விடுகிறது. இப்படியான நுழைவுத்தேர்வுகளின் அடிப்படையே 'தகுதியற்றவர்கள் உள்ளே வந்துவிடுகிறார்கள்' என்பதே. அப்படியானால் தகுதியற்ற மருத்துவ சமூகம் வெளியே வந்து அது சமூகப் பிரச்னையாக வெளிப்பட்டிருக்க வேண்டும் (எ.கா: தகுதியற்ற 50 மருத்துவர்கள் தங்கள் படிப்பை முடித்து தவறான சிகிச்சை அளித்துள்ளனர் என்பது போல). அப்படி தமிழ்நாட்டின் சமூகப் பிரச்னையாக இது வெளிப்படவில்லையே! மாறாக அதுவே சமூகத்திற்கு நன்மையாக அமைந்திருக்கும் போது (தமிழ்நாட்டில் பயின்று வெளிவந்துள்ள முந்தைய தலைமுறை மருத்துவர்கள் சிறப்பான தகுதிபெற்று திறமையுடன் உள்ளனர்) பிறகு எதற்கு இந்த மாதிரியான நுழைவுத்தேர்வுகள் என்கிற கேள்விகள் எழுகின்றன.


நுழைவுத்தேர்வைச் சார்ந்து இல்லாமல், சந்தைத் தேவை என்ற நிலையிலேயே இந்தத் 'தகுதிவாதம்' பேசப்படுமானால், அது சந்திக்க வேண்டிய முன்நிபந்தனை ஒன்று உண்டு.

**(சாத்தியங்களைத் தேடுவோம்...)**




எந்த
ஒரு நிமிடத்திலும்
இந்த உலகம் முழுக்க
சராசரியாக 1,800 இடங்களில்
மின்னல் தோன்றி இடி இடிக்கிறது.
ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டால்
ஆண்டுக்கு சுமார் ஒன்றரை கோடி
இடி, மின்னல்கள் நிகழ்கின்றன.

இங்கு
வேக
அபர
அமெரிக்கா
மாகாண
மெதுவாக
அ



சனி கிரகம் எவ்வளவு
பெரியது என்றால், 755
பூமிகளை அதற்குள்
போட்டு நிரப்பிவிடலாம்,
அவ்வளவு
பிரமாண்டம்!



வலிநிவாரணி மருந்தான
Acetaminophen, 1887-ம் ஆண்டு
முதன்முதலாகக் கண்டறியப்பட்டது.
'உணர்வுகளைக் கட்டுப்படுத்துகிறது,
ஆண்தன்மையைக் குறைக்கிறது'
என்றெல்லாம் சொல்லி அப்போது
நிராகரிக்கப்பட்டது. இதன்
பக்கவிளைவுகள் குறைக்கப்பட்டு
1955-ம் ஆண்டு
அங்கீகரிக்கப்பட்டது.

Boanthropy
என்று ஒருவகை
மனச்சிதைவு நோய்
பாதிப்பு சிலருக்கு அரிதாக
ஏற்படுகிறது. இதனால்
பாதிக்கப்பட்டவர்கள், தங்களை
ஒரு பசு மாடு என்று
நினைத்துக்கொள்வார்கள்.






நம் உடலில்
இருக்கும்
ஆக்சிஜனில் சுமார்
20% அளவை
நம் மூளை
பயன்படுத்துகிறது.

வா
என்
எ
கே

உலக
அதிசயங்களில்
ஒன்றான, பாரிஸ் ஈபிள்
டவர் உண்மையில் ஸ்பெயின்
நாட்டின் பார்சிலோனா நகரில்
நிறுவப்பட இருந்தது. 'இது
அழகாகவே இல்லை' என்று
நகர மக்கள் நிராகரித்ததால்
பாரிஸ் வந்தது.



தேனீக்களின்
கூடுகளில் வாழும்
மெழுகுப் புழுக்கள்
பிளாஸ்டிக்கை வெகு
இயல்பாகத் தின்று செரிமானம்
செய்வதாக விஞ்ஞானிகள்
கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன்
வயிறு போன்ற வடிவத்தைச்
செயற்கையாக உருவாக்கி,
பிளாஸ்டிக்கை அழிக்கப்
பயன்படுத்தலாமா என்று
ஆராய்ச்சி நடக்கிறது.

ஆந்தைகளின்
இறக்கைகள், நடுவே
காற்றுப் புகாதவாறு
வடிவமைக்கப்பட்டவை.
அதனால் அவை
பறக்கும்போது எந்தச்
சத்தமும் கேட்காது. இரவு
நேரத்தில் வேட்டையாட இது
வசதியாக இருக்கிறது.

புதிதாக
உருவாக்கப்படும்
சாக்லேட்களைச் சுவைத்துப் பார்த்து
அவற்றின் தரத்தைச் சொல்வதற்குத்
தனியாக விஞ்ஞானிகள் உண்டு.
பிரிட்டனில் இப்படி ஒரு சாக்லேட்
சயின்டிஸ்ட் தனது நாக்கை 10
லட்சம் பிரிட்டிஷ் பவுண்டுக்கு
இன்சூரன்ஸ்
செய்திருந்தார்.

..வாகனங்களை
..மாக ஓட்டினால்
..ாதம். ஆனால்,
..ாவின் கலிபோர்னியா
..த்தில் வாகனத்தை
..க ஓட்டுபவர்களுக்கு
..பராதம் உண்டு.



ரத்தச் சிவப்பணுக்கள்
வெறும் 20 நொடிகளில்
நம் உடலுக்குள்
ஒரு சுற்று போய்
வந்துவிடுகின்றன.

நிலவுக்குச் சென்ற
அமெரிக்க விண்வெளி
வீரர்களுக்கு ஐஸ்லாந்து
நாட்டில்தான் பயிற்சி
கொடுத்தனர். ஏனெனில்,
நிலவின் தரைப்பரப்பு போன்ற
தோற்றத்தில் அங்கு சில
பகுதிகள் உள்ளன.




செல்லப்பிராணிகளைப்
பயணங்களில் அழைத்துப்
போவது நூற்றாண்டு தாண்டிய
வழக்கம். டைட்டானிக் கப்பல் கடலில்
மூழ்கியபோது, பலர் உயிருடன்
மீட்கப்பட்டனர். மூன்று நாய்களும்
அந்த விபத்தில் உயிர்
பிழைத்தன.

கடந்த 1923-ம்
ஆண்டு ஒரு குதிரைப்
பந்தயத்தில் குதிரையை ஓட்டிய
ஜாக்கிக்கு திடீர் மாரடைப்பு வந்து,
குதிரையின் முதுகில் அமர்ந்தபடியே
உயிரிழந்தார். ஆனாலும் அவர்
குதிரை அந்த ரேஸில் முதலிடம்
பிடித்தது. இன்றுவரை இறந்த
பிறகு ஜெயித்த ஒரே ஜாக்கி
அவர்தான்.





இந்த பூமியில்
..ழும் மனிதர்களின்
..ணணிக்கையைவிடப்
பூச்சிகளின்
..ண்ணிக்கை 100
..டி மடங்கு அதிகம்.



கங்காருக்கள் தங்கள்
மரணம் வரை
வளர்ந்துகொண்டே
இருக்கின்றன. உலகிலேயே
இந்த அரிதான பண்பு
கொண்ட ஒரே பாலூட்டி
இனம் அதுதான்.



அமெரிக்க மற்றும் ரஷ்ய ராணுவங்கள்,
கடலில் வாழும் டால்பின்களுக்கு
விசேஷப் பயிற்சி அளிக்கின்றன.
கடலுக்கடியில் நீந்திவரும்
உளவாளிகளையும், ஆழ்கடலில்
புதைக்கப்படும் கண்ணிவெடிகளையும்
கண்டறிய அவற்றுக்குப் பயிற்சி
தரப்படுகிறது.

அமெரிக்காவின் வெள்ளை
மாளிகையில் 1891-ம் ஆண்டு
முதன்முதலாக மின்சார வசதி
செய்யப்பட்டபோது, அதிபராக
இருந்த பெஞ்சமின் ஹாரிசன்
சுவிட்ச்களைத் தொடவே பயந்தாராம்.
ஷாக் அடித்துவிடும் என்று அவர்
குடும்பமே தயங்கியதால், எல்லா
நேரங்களிலும் பணியாளர்கள்தான்
சுவிட்சைப்போட்டு
நிறுத்துவார்கள்.

ஃபாக்லாந்து போரின்போது புதைக்கப்பட்ட
பல கண்ணிவெடிகள் இன்னமும்
வெடிக்காமல் அந்தத் தீவில் உள்ளன.
அங்கு சுமார் 10 லட்சம் பெங்குயின்கள்
வாழ்கின்றன. அவற்றின் உடல்
எடைக் குறைவு என்பதால், அவை
மிதிக்கும்போது கண்ணிவெடிகள்
வெடிப்பதில்லை.

# கதை உணர்த்தும் நீதி 16

## செந்தில் ஜெகன்நாதன்

துயரம் மனித வாழ்க்கையில் தவிர்க்க இயலாதது என்பதையே தொடர்ச்சியான துயரங்களை அனுபவமாக எடுத்துக்கொள்ளும்போதுதான் மனிதர்கள் உணரத் தொடங்குகிறார்கள். சிந்தித்துப் பார்த்தால், உள்ளத்தால் மனிதர்களை உறுதி செய்பவை கஷ்டங்களும் தடைகளும்தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

'எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் அமைதி நிலவும்' என்ற கவியரசரின் வரிகளை மனத்தில் நினைத்துக்கொண்டால் எந்தச் சூழலையும் எதிர்கொள்ளலாம் என்ற மனநிலை உருவாகும்.

ஒருமுறை கலாம் சொன்னதாக ஒரு கருத்தைப் படித்தேன். 'துன்பத்துக்குத் துன்பம் கொடுங்கள். அப்போதுதான் துன்பம் நம்மைவிட்டு ஓடும்.'

இதை வாசிக்கும்போது எதிர்கொள்ளல் என்பது என்னவென்று புரிகிறது அல்லவா? துன்பத்தை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பதும் புரிகிறது அல்லவா?

நம் பிறப்பே ஒரு போராட்டத்துடன்தான் தொடங்குகிறது. இந்த மண்ணில் வந்து பிறந்தது முதல் எத்தனை எத்தனை தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டியுள்ளது! தவழ்ந்து எழுந்து தடுமாறி விழுந்து நடைபழகத் தொடங்கி, நாவை அசைத்துப் பேசத் தொடங்கி, ஒவ்வொன்றாய் கற்று, ஒவ்வொருவராய்ச் சந்தித்து, எத்தனைப் படிகளில் ஏறி இத்தனை தூரம் வந்திருப்போம். இதில் துயரத்தையும், தடைகளையும் உரமாய் மாற்றிக்கொள்ளும் மனபலம் கொண்டவர்கள் செழித்து வளர்கிறார்கள். மற்றவர்கள் தடுமாறிப் போகிறார்கள்.

இதுகுறித்துச் சிறுவயதிலிருந்தே சொல்லப்படும் நீதிக்கதையே இந்தக் கருத்துக்குச் சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தார். அவர் தீவிரமான கடவுள் பக்தி உடையவர். ஜவுளி மூட்டையைச் சுமந்துகொண்டு கிராமப்புறங்களுக்கு நடந்தே போய் வியாபாரம் செய்துவந்தார். வீட்டில் பிள்ளைகள் சரியாகப் படிக்காததால், அவர் மிகவும் வேதனை அடைவார். 'தெய்வம் நமக்கு மட்டும் ஏன் இவ்வளவு கஷ்டங்கள் கொடுக்கிறது' என்று நினைத்து, தெய்வத்திடம் போய் முறையிடுவார். ஆனால், வாழ்வில் எந்த முன்னேற்றமும் இல்லை.

ஒருநாள் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'தெய்வத்திடம் தனிமையில் நம் குறைகளை எடுத்துக் கூறினால் என்ன' என்று நினைத்தார். அதன்படி, ஒரு நாள் பூஜையெல்லாம் முடிந்து கோயில் மூடப்படும்போது எல்லோரையும் போல வெளியில் போகாமல் கோயிலுக்குள்ளேயே மறைந்துகொண்டார். அவருக்கு அசதியாக இருந்ததால், அங்கேயே சிறிது நேரத்தில் உறங்கிவிட்டார்.

நடு இரவில் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. விழித்துப் பார்த்தார். அப்போது படிக்கட்டும், தூணும் பேசிக்கொண்டிருந்தன. இரண்டு கற்கள் பேசிக்கொள்வது ஆச்சர்யமாகவும், அதிர்ச்சியளிப்பதாகவும் இருந்தாலும் அவர் அதை உற்றுக் கவனித்தார்.

அப்போது படிக்கட்டு தூணிடம், "நாம் எல்லோரும் ஒரே பாறையாகத்தான் இருந்தோம். அங்கு வந்த கொத்தனாரும் சிற்பியும் பாறையைத் தட்டிப் பார்த்து, 'இந்தக் கல்லைப் படிக்கட்டாகவும், இந்தக் கல்லைத் தூணாகவும், இந்தக் கல்லைச் சிலையாகவும் வடிக்கலாம்' என்று கூறினார்கள். அதன்படி நம்மை உருவாக்கினார்கள். இப்போது நீ பரவாயில்லை, தூணாக நிற்கிறாய். நானோ படிக்கட்டாக மாறினேன். என்னைக் கோயிலுக்கு வருவோர், போவோர் எல்லோரும் மிதித்துச் செல்கின்றனர். என்னால் வலியைத் தாங்க முடியவில்லை" என்று கூறியது.

தூண் அதற்கு படிக்கட்டிடம் சொன்னது. "உனக்காவது பரவாயில்லை, மிதித்துவிட்டுச் சென்றுவிடுகின்றனர். ஆனால், நானோ அப்படியல்ல... எப்போதுமே இந்தக் கோபுரத்தைச் சுமந்துகொண்டு அப்படியே நின்றுகொண்டிருக்கிறேன். எவ்வளவு சுமையைத் தாங்க வேண்டியிருக்கிறது தெரியுமா? நம்முடன் வந்து சிலையாக இருக்கிறதே, அதற்குத் தினசரி பால் அபிஷேகம்,

சந்தன அபிஷேகம், நெய் அபிஷேகம் என்று பலவிதமான அபிஷேகங்கள் செய்கிறார்கள். சிலை சந்தோஷமாக இருக்கிறது” என்று தூண் கூறியது.

உடனே எங்கோ இருந்து மெதுவாக ஒரு சத்தம் கேட்டது. அது சிலையின் குரல்தான். உடனே படிக்கட்டும் தூணும் சிலையைப் பார்த்து, ‘‘நீ மட்டும்தான் நம்மில் சந்தோஷமாக இருக்கிறாய். எங்களின் நிலைதான் பரிதாபத்துக்குரியது’’ என்று கூறின.

உடனே சிலை, “நம் எல்லோரையும் சிற்பி உளியால் செதுக்கும்போது நீங்கள் வலியால் துடித்துத் துவண்டீர்கள். அதனாலே இன்றைய உங்களது நிலை அமைந்தது. படிக்கட்டைப் பார்த்து உன்னை மிதித்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். தூணோ, கோபுரத்தைத் தாங்கிக் கொண்டு நின்றுவிடுகிறது. ஆனால், என் நிலை இப்படி... ஒவ்வொருவரும் வந்து ஒரு அபிஷேகம் செய்துவிட்டு, அவரவர் குறைகளை எல்லாம் சொல்லி என்முன் வணங்குகிறார்கள். அதற்குக் காரணம், சிற்பி எத்தனை முறை என் மீது உளியால் அடித்தபோதும் நான் அது கண்டு துவளவில்லை. மாறாக அதை எதிர்கொண்டேன். துயரத்தை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்ட எதுவும் வணங்கத்தக்க இடத்தை அடையும் என்பதே என் நிலை இந்த உலகத்துக்குச் சொல்லும் செய்தி. வீணாக எதை எதையோ நினைத்து வருந்தாதீர்கள். ‘இங்கு வந்தால் தங்கள் மனம் அமைதியடையும்’ எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பிக்கையுடன் வரும் இத்தலத்தில் இருப்பதே நமக்கான வரம் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியாக இருங்கள்” என்றது.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜவுளி வியாபாரிக்கு அப்போது ஓர் உண்மை புரிந்தது. இந்த வாழ்க்கையில் மாறாதது கஷ்டங்கள்தான். அவற்றை எதிர்கொண்டவர்களுக்குத்தான் வெற்றி கிடைத்திருக்கிறது, சமூகத்தில் பிறர் மதிக்கும் உயர்ந்த இடம் கிடைத்திருக்கிறது. கஷ்டங்களைப் பார்த்து அயர்ச்சி அடைந்தவர்கள் கடைசி வரை கல்லாய் இருந்து விடுகிறார்கள். அவர்களை யாரும் பெரிதாய் பொருட்படுத்துவதில்லை.

அதே சமயத்தில், ‘நான் இத்தனைக் கஷ்டங்களையும் மீறி இப்பிரபஞ்சத்தில் இத்தனை உயிர்களோடு வாழ்ந்துகொண்டிருக்கிறேன்’ என்பதை உணர்ந்தாலே வாழ்வின் அர்த்தம் தெரிந்துவிடும். எல்லா நிலையிலும், எல்லோர்க்கும் கஷ்டம் உண்டு. துரும்புக்கும் அதன் அளவில் ஒரு துன்பம் உண்டு, மலைக்கு அதன் அளவில் பிரச்னை உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ளல் மிக அவசியம். ●



# எல்லோருக்கும் கஷ்டம் உண்டு!

# இன்று

மரக்கிளையிலிருந்து ஓர் இலை உதிர்வது போன்றதுதான் மாற்றம் நிகழ்வதும்! இலை உதிர்வது அந்த மரத்துக்கு இழப்பு; வலி; துயரம். மரத்தின் அழகும் அதனால் பறிபோகிறது. ஆனால், பழுத்த இலைகள் உதிர்ந்தால்தான் புதிய துளிர்கள் வர முடியும்; மரத்துக்கு வளர்ச்சியும் அதனால்தான் கிடைக்கும். வலிகளோடு நிகழும் மாற்றங்களே வளர்ச்சிக்கு உரம். இதைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கு முன்னேற்றம் இல்லை.

ஒவ்வொரு இழப்பும், 'இதைவிடச் சிறந்த இன்னொன்று உங்களுக்குக் கிடைக்கும்' என்பதை உணர்த்தவே நிகழ்கிறது. இழந்ததை நினைத்து வருத்தப்படுகிறவர்கள், புதிதாகப் பெற வேண்டியவற்றுக்கு உழைக்காமலே போய்விடுகிறார்கள்.

முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் எல்.கே.ஜி சிறுவன் அவன். சந்தோஷமும் குழப்பமுமாக இருந்தான். 'பள்ளி என்ற புதிய இடம் எப்படி இருக்கும்? இதுவரை அறிமுகமே இல்லாத புதிரான இடத்துக்குப் போகிறோமே' என்ற கவலை ஒரு பக்கம். பேசவும் சேர்ந்து விளையாடவும் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள் என்ற சந்தோஷம் இன்னொரு பக்கம்.

புதிய டை, இறுக்கமான பெல்ட்... இரண்டுக்கும் நடுவில் மொடமொடப்பாக இருந்த யூனிபார்ம் கொஞ்சம் அவஸ்தையாகத்தான் இருந்தது. ரிலாக்ஸாக உடைகள் அணிந்து ஆட்டமும் சந்தோஷமுமாகப் பழகியவன்; இப்படி ஒரே நாளில் எல்லாம் மாறிவிடும் என்று எதிர்பார்க்கவில்லை. போதாக்குறைக்கு ஷூ வேறு அணிய வேண்டுமாம்.

சாக்ஸை மாட்டிக்கொண்டு, ஷூவை எப்படிப் போட்டுப்பார்த்தாலும், அதில் கச்சிதமாக லேஸைப் பின்னி அவனால் முடிச்சுப் போடமுடியவில்லை. அம்மா வந்து கன்னத்தில் தட்டிக்கொடுத்துவிட்டு, அவன் எதிரிலேயே உட்கார்ந்து ஷூவின் துளைகளில் லேஸைத் திணித்து வலைப்பின்னல் போல போட்டுக் காட்டினாள்.

"இது ரொம்ப சிம்பிள் செல்லம்; போகப் போக உனக்குப் பழகிடும்" என்றாள். ஷூவை மாட்டும்வரை அமைதியாகக் கவனித்த சிறுவன், போட்டுமுடித்ததும் ஓவெனக் கதறி அழ ஆரம்பித்தான்.

அம்மா புரியாமல் குழம்பினாள். ''அதான் போட்டாச்சே... அப்புறம் ஏன் அழறே?" என்று கேட்டாள்.

"இவ்வளவு கஷ்டமா இருக்கே இது... இதேமாதிரி வாழ்க்கை பூராவும் போட்டுக்கணுமே... அதை நினைச்சு அழறேன்" என்றான் சிறுவன்.

புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றபடித் தங்களை மாற்றிக்கொள்ளாதவர்களுக்கு முன்னேற்றம் கிடையாது. ஓர் இடத்தில் வேலைக்குச் சேர்ந்து, ஓய்வுபெறும்வரை அங்கேயே பணி செய்யும் வழக்கம் இப்போது இல்லை. அடிக்கடி இடம் மாறுகிறார்கள். இப்படி மாறுகிற பலரும், "என்ன இருந்தாலும் பழைய ஆபீஸ் மாதிரி வருமா?" எனப் புலம்பியபடி இருப்பார்கள். மனத்தை பழைய அலுவலகத்தில் வைத்துவிட்டு, உடலை மட்டும் இங்கே கொண்டு வருவார்கள். இன்னும் சில ஆண்டுகளில் வேறோர் அலுவலகம் சென்ற பிறகு, இந்த அலுவலகத்தின் பெருமையை



அங்கே சொல்வார்கள். இருக்கும் இடத்தின் அருமை, அங்கு இருக்கும்போது தெரிவதில்லை.

முன்னேற்றத்துக்கு இதுதான் தடைக்கல். இன்று செய்யும் எந்தச் செயலையும், நேர்மறையான மனநிலையில் அணுகுங்கள். அதற்கு இந்த வாழ்க்கை விதிகள் உதவும்:

❖ பெருமழைக்காலம் போல வாழ்க்கையின் சவால்களை நினையுங்கள். மழை கொட்டும்போது, ‘குறைவான மழை வேண்டும்’ என வேண்டாதீர்கள். அந்தக் கடும்மழையைத் தாங்குகிற குடையைக் கேளுங்கள். பிரச்னைகளை இந்த மனநிலையில் அணுகுங்கள்.




❖ வெள்ளம் வரும்போது, தண்ணீரில் சிக்கும் எறும்புகளை மீன்கள் சாப்பிடும்; வெள்ளம் வடியும்போது, தவித்து சாகும் மீன்களை எறும்புகள் சாப்பிடும். நேரம்தான் இதைத் தீர்மானிக்கும். அதுவரை காத்திருங்கள். உங்களுக்கான வாய்ப்பு வரும்.

❖ மேடையில் நாடகம் நடக்கும்போது முன்வரிசை இருக்கைக்கு ஆசைப்படுவார்கள்; சினிமா என்றால் கழுத்து வலிக்கும் எனப் பின்வரிசை இருக்கைகளுக்குப் போவார்கள். எப்போதும் ஒரே இடத்துக்கு யாரும் ஆசைப்படுவதில்லை. எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பதை நடக்கும் நிகழ்வுதான் தீர்மானிக்கிறது.

❖ சோப்பு தயாரிக்க எண்ணெய் தேவைப்படுகிறது; எண்ணெயின் கறையை நீக்க சோப்புதான் உதவுகிறது. வாழ்க்கை இப்படியான முரண்பாடுகள் நிறைந்ததே!

❖ வாழ்க்கை என்பது சரியான நபரைத் தேர்ந்தெடுத்துப் பழகுவது அல்ல; பழகும் எல்லோருடனும் சரியான உறவை வைத்திருப்பதே!

❖ எதிலும் ஆரம்பத்தில் நாம் எவ்வளவு அக்கறை காட்டுகிறோம் என்பது முக்கியமல்ல; கடைசிவரை அந்த அக்கறை இருக்கிறதா என்பதே முக்கியம்.

❖ எந்தப் பிரச்னைக்கும் நீங்கள் முயற்சி செய்த தீர்வுகளைத் தாண்டி, இன்னமும் முயற்சி செய்தே பார்க்காத ஏதோ ஒரு தீர்வும் கண்டிப்பாக இருக்கும். அதைத் தேடிக் கண்டடையுங்கள்.

❖ ஒரு பிரச்னையில் சிக்கித் தவிக்கும்போது ‘இதுதான் முடிவு’ என எண்ணாதீர்கள். அதை ஒரு திருப்பமாக நினையுங்கள். அங்கிருந்து திரும்பிப் போகும்போது எதிர்பாராத ஒரு தீர்வு கிடைக்கும் என நம்புங்கள்.

❖ வாழ்க்கையில் வெற்றியை நோக்கி நிமிடங்களில் சென்றடைய லிஃப்ட் எதுவும் கிடையாது. படிகளில் மட்டும்தான் ஏறிச்செல்ல முடியும். வெற்றியின் சிகரத்தில் இருக்கும் பலரும் அப்படிச் சென்றடைந்தவர்களே!

❖ அடுத்தவர்களின் உணர்வுகளோடு விளையாடாதீர்கள். நீங்கள் அதில் ஜெயிக்கலாம்; ஆனால், அந்த மனிதரின் உறவை வாழ்க்கை முழுக்க இழந்துவிடுவீர்கள்.

❖ எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் என இரண்டு வகை மனிதர்களை மட்டுமே சொல்லமுடியும். ஒன்று, குழந்தைகள்; இரண்டு, மனநலம் பாதிக்கப்பட்டவர்கள். உங்கள் இலக்கை அடைவதில் பைத்தியமாக இருங்கள்; அதை அடைந்த பிறகு, ஒரு குழந்தை போல உங்கள் சாதனையைக் கொண்டாடுங்கள். ●



# ஏழ்மை அவமானம் இல்லை!

வசதி குறைவான மாணவர்கள், பணவசதியில் அவர்களை மிஞ்சிய குடும்பத்து மாணவர்களுடன் படிக்கும்போது பல அவமானங்களை அனுபவிப்பார்கள். எதிராளிகளால் திட்டமிட்டுச் சில அவமானங்கள் நடத்தப்படும். சில சூழ்நிலைகளே அவமானத்தைக் கொடுத்துவிடும்.

'காதல் கொண்டேன்' திரைப்படத்தில் தனுஷ் ஏழை மாணவராக வருவார். அவர் கொண்டு வந்த கெட்டுப் போன சாதத்தைப் பலர் முன் உண்டு அவமானப்படும் காட்சியைப் பார்த்து நாம் நெகிழ்ந்திருப்போம். இதுபற்றிச் சகோதரி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் தன் அனுபவத்தைச் சொன்னார்...

"பத்தாம் வகுப்பு படிக்கும்போது, தேர்வுக்காகப் பள்ளியில் ஜனவரிக்குப் பிறகு 'நைட் ஸ்டடி' ஏற்பாடு செய்தார்கள். காலையில் வீட்டில் சாப்பிட்டுவிட்டு மதிய உணவை எடுத்துச் சென்று விடுவோம். மாலை பள்ளியில் டீ கொடுப்பார்கள். இரவு உணவை அம்மா கொண்டு வருவார். சாப்பிட்டுவிட்டு, இரவெல்லாம் படித்து விட்டு மறுநாள் காலை வீடு திரும்புவோம்.

என் தோழி ஒருத்தி உணவுப்பிரியை. அவளுக்கு எப்போதும் பசித்துக் கொண்டிருக்கும். அவள் எடுத்து வந்த மதிய உணவைச் சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில், 'பசிக்குதே. இனி நைட் சாப்பாடு ஏழு மணிக்குதான எடுத்துட்டு வருவாங்க. எப்படி தாங்குவேன்' என்று புலம்புவாள்.

எங்கள் செட்டில் ஒரே ஒரு தோழி மட்டும் இரவு உணவையும் காலையிலேயே எடுத்து வந்து விடுவாள். காரணம் அவளுக்கு அம்மா மட்டும்தான். அம்மாவும் சில வீடுகளில் வீட்டு வேலை செய்து இவளைப் படிக்க வைக்கிறார். மிக ஏழ்மைச் சூழ்நிலை அவள் வீட்டில் இருப்பதை அவள் உடையிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். அவள் அம்மாவால் இரவு உணவு செய்து ஸ்கூலுக்கு எடுத்து வர முடியாது என்பதால், இரவு உணவையும் சேர்த்து காலையிலேயே எடுத்து வந்து விடுவாள்.

பசித்தோழி ஒருநாள் அந்த ஏழைத்தோழியின் இரவுச் சாப்பாட்டை மாலை ஆறு மணிக்குக் கேட்டாள். 'ஏய், என்னால பசி தாங்க முடியல. உன் சாப்பாட்டக் கொடுத்திரு. என் அம்மா நைட் எனக்கு எடுத்துட்டு வர்ற சாப்பாட்டை நீ சாப்பிட்டுக்கோ' என்றிருக்கிறாள். ஏழைத்தோழியும் வேறு வழியில்லாமல் கொடுத்தாள். அந்தச் சாதத்தை சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் இவளுக்கு வாந்தி வந்தது. கூடவே, வயிற்றுப்போக்கும் ஏற்பட்டது.

எட்டு மணிக்கு அவள் அம்மா இரவு உணவும் பழமும் கொண்டு வரும்போது இவள் வாந்தி எடுத்தபடி அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். விஷயத்தைக் கேள்விப்பட்ட அவள் அம்மா உணர்ச்சிவசப்பட்டுக் கத்த ஆரம்பித்து விட்டார். 'சாப்பாட்டுக்கு அலைவியாக்கும் நீ. எதையாவது யார்கிட்டயாவது வாங்கித் தின்னு. அப்புறம் இப்படி உடம்பு வரத்தான் செய்யும்' என்று கத்தினார்.

எல்லா மாணவிகளுக்கும் இந்த விஷயம் பரவியது. 'என்ன சாப்பாடோ அது! அப்படித்தான் அவ இவ்வளவு நாள் சாப்பிட்டுருக்கா போல' என்பது போல ஏழைத்தோழி பற்றி கமெண்ட் அடித்தார்கள்.

முடிவில் சிஸ்டர் வந்து விஷயத்தை விசாரித்திருக்கிறார். 'சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்பது சாதாரண விஷயம். நீங்கள் உங்கள் மகளை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று சொல்லிப் பசித்தோழியை அனுப்பினார். ஏழை மாணவியை அழைத்து, 'நீ ஏன்மா படிக்காம இங்க வேடிக்கை பாக்குற. போய்ப் படி, நைட் டெஸ்ட் இருக்கு' என்று சபையைக் கலைத்திருக்கிறார்.

நாம் கெட்டுப் போன உணவை அறியாமல் சாப்பிடுவது வேறு. நம் சாப்பாட்டைப் பிறர் சாப்பிட்டுவிட்டு, 'இது கெட்டுப் போன சாதம். அதனால்தான் எனக்கு வாந்தி' என்று சொல்லும்போது இன்னும் அவமானமாக இருக்கும். அப்படி ஒரு அவமானம் என் ஏழைத்தோழிக்கு ஏற்பட்டது. அவள் நிலையைப் பார்க்க அப்போது மனதுக்கு கஷ்டமாக இருந்தது" என்று சகோதரி தன் தோழியின் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

"உங்க தோழி இதை எப்படி எடுத்துக்கிட்டாங்க?"

"அவ இதைப் பெரிசா எடுத்துக்கலை. அழவும் இல்ல. 'நான் என் வாழ்க்கையைத்தான் வாழ முடியும். அதுல நீங்க மூக்கை நுழைச்சா அதுக்கு நான் பொறுப்பில்ல' என்கிற மாதிரி அமைதியா இருந்துட்டா. இப்ப அவ மாஸ்டர் டிகிரி முடிச்சி நல்ல கம்பெனில நல்ல வேலையில இருக்கா" என்று முடித்தார்.

ஏழ்மையின் காரணமாகச் சூழ்நிலை திணித்த அவமானங்களுக்குக் கூனிக் குறுகாத மனப்பான்மை இளம் வயதில் அமைவது என்பது மிகப்பெரிய மனப்பக்குவம் ஆகும். அப்படி இருப்பவர்கள் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் இந்த ஏழ்மையில் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையை எப்படிக் கையாள வேண்டும் என்பதை அவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்தால் அது பெரிய நன்மையாக முடியும். பல மாணவர்கள், ஏழ்மை கொடுக்கும் தாழ்வு மனப்பான்மையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உளவியல்ரீதியாக அவர்களைப் பலப்படுத்துவது, சமூகத்துக்கும் நன்மை கொடுக்கும். ஆசிரியர்கள் இதை அவ்வப்போது பேசுங்கள். ஏழ்மையால் அவமானப்பட ஒன்றுமில்லை என்று புரிய வையுங்கள்.

**– விஜயபாஸ்கர் விஜய்**


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | | | |
| **முகவரி** | | | |
| **தொலைபேசி** | | **அலைபேசி** | |
| **மின்னஞ்சல்** | | | |

**டிக் செய்யவும்**

- ☐ **ஓர் ஆண்டு ரூ.240**
- ☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.450**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com

# யாவருக்குமான தமிழகத்தின் முதல் பள்ளிக்கூடத்தைத் திறந்தவர்!




தமிழக பொதுக்கல்விப் போராளிகள் 1

**ஆயிஷா. இரா.நடராசன்**

இந்தியக் கல்விக் கடலில் தமிழகம் தனித்தீவாக மிளிர்கிறது. அது பலரை இன்று முள்ளாகக் குத்துகிறது. பட்டி தொட்டி எல்லாம் பள்ளிகள்... பெண்கல்வி, தாய்மொழிக்கல்வி, கல்லூரிக் கல்வி, தாழ்த்தப்பட்ட பழங்குடி இன மக்கள் கல்வி, மதச்சார்பின்மை, அறிவியல் கல்வி, ஏன் பொறியியல், மருத்துவம்என்றுநம்மகத்துவம்,மத அடிப்படைவாதமும் சனாதனமும் சமஸ்கிருதவாதமும் பேசினால் பிரிவினையைத் தூண்டித் தனது கார்ப்பரேட் காவிச் சந்தையைக் கரையேற்றிவிடலாம் என்று வந்த ஒரு கூட்டத்தைத் திக்குத் தெரியாமல் திணற வைத்திருக்கிறது.

கவர்னர் மாளிகை விருந்தில் தொடங்கி, கேள்விக்கணைகளால் சாதாரண வெகுஜன மக்கள், ‘எதையும் சந்தேகி’ என்று களத்தில் குதிப்பதைக் காண கண்கோடி வேண்டும் என்று மனம் துள்ளுகிறது. நூறாண்டு, ஏன் இருநூறு முன்னூறு ஆண்டுகால அயராத போராட்டம் நம் தமிழகக் கல்வியை இப்படியாகச் செதுக்கி இருக்கிறது என்றால் நம்புவது கஷ்டம். அத்தகைய தமிழக பொதுக்கல்விப் போராளிகளைத்தான் நாம் காண இருக்கிறோம்.

தமிழகக் கல்வி என்பது கொடிய சாதியக் கல்வியாகவே இருந்தது. இன்று மீண்டும் கொண்டுவரத் துடிக்கிறார்களே, அந்தக் குலக்கல்வியாகவே இருந்தது. அது இடையில் வந்ததுதான். தமிழின் தொன்மை எனும் கீழடி வைகைநாகரிகம்முதல்சங்ககாலம்கடந்தால்கூடச் சனாதனமோ சாதியோ – வர்ணாசிரமமோ – மனுவோ எதுவுமே இங்கு நுழைந்ததில்லை. கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய நம் தமிழ் மொழி சாதி பார்த்த மொழி அல்ல. ஆனால் தமிழ் மண்ணை இடையில் சனாதனம் ஆண்டது. இன்றும் அதன் பிடியிலிருந்து நாம் முழுமையாக விடுபட்டுவிட்டதாகச் சொல்வதிற்கில்லை.

குருவின் குலத்தை மட்டுமே கற்றிட அனுமதித்த குருகுலக்கல்வி சொல்லிக் கொடுத்தது சகோதரத்துவத்தை அல்ல, சனாதன சடங்குகளைத்தான். சமணம் இங்கே பள்ளிகளைத் திறந்து கல்வியை மக்கள் சேவையாக்கியது. அதை முற்றிலும் அழித்தொழித்து சனாதனத்தை, கொடிய தீண்டாமையை விதைத்த வரலாறு தனி. அதை எல்லாம் கடந்து பொதுப்பள்ளியை நாம் சாதித்த வரலாறு இருக்கிறதே, அது மாபெரும் போராட்டம். அந்தக்களத்தில் மாண்ட மாவீரர்கள் பலர். அவர்களில் முதன்மையானவர், சீகன் பால்கு அடிகளார். கூலிகளின் பிள்ளைகள், பறையர், புலையர் என யாவருக்குமான தமிழகத்தின் முதல் பள்ளிக்கூடத்தைத் திறந்தவர்.

சாதாரண மக்களின் கல்விச் சேவைக்காகக் கசையடி வாங்கியவர். அவரை மனித மலத்தால் அடித்தார்கள். சிறையில் அடைத்தார்கள். ஓயாமல் திரும்பத் திரும்பக் கல்விப் பணிகளுக்கே அவர் திரும்பிக் கொண்டிருந்தார். அயராத கல்விப்போராட்டத்தின் ஊடாக களத்திலேயே தனது 37வது வயதில் இறந்துபோனார் சீகன்பால்கு.

ஆங்கிலேயர்கள்வருகைக்குமுன்டென்மார்க்கைச் சேர்ந்த டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி – மராட்டிய சிவாஜி காலத்திலேயே இந்தியா வந்துவிட்டது. கவர்னர் ஹாசியஸ் என்பவனை தரங்கம்பாடி பகுதியை ஆள்வதற்கும் டென்மார்க்கோடு வணிகம் நடத்தவும் ஒரு காலனியாக்கி அப்போதைய டென்மார்க் மன்னர் நான்காம் பெடரிக் நியமித்திருந்தான். அவர்களது அப்போதைய நோக்கம் வணிகமாகவே இருந்தது. இந்த நிலையில் கல்வியைத் தனது நோக்கமாகக் கையில் எடுத்தவர் சீகன் பால்கு.

1682 ஜூலை 10–ம் தேதி ஜெர்மனியின் புல்ஸ்னிட்ஸ் எனும் ஊரில் பிறந்தவர் அவர். அவரது பெற்றோர் நவதானிய வணிகர்கள். ஆறு வயதிற்குள் தாயை இழக்கிறார். பிறகு அடுத்த இரு ஆண்டுகளில் தந்தையை, சகோதரியை இழக்கிறார். பள்ளிக்கூடம் ஈர்க்கவில்லை. அனைவரையும் போல அவர் அன்றைய தீவிர கிருத்துவக் கல்வியைக் கேள்வி ஏதுமின்றி அப்படியே ஏற்கவில்லை. 17 வயதில் பரவச மனப் பிறழ்வு நிலை அவருக்கு ஏற்படுகிறது. கல்வியும் வாழ்க்கையும் மறுக்கப்பட்டவர்களுக்கான ஜெர்மன் மண்ணின் தூதுவர் எனத் தன்னை அழைத்துக்கொள்ளத் தொடங்கினாராம். அதே ஆண்டில் ஹாலே பல்கலைக்கழகத்தில் இணைந்தார். கல்வி குறித்த சீகன் பால்கு அடிகளாரின் அடிப்படை சித்தாந்தங்கள் அங்குதான் உருப்பெற்றன.

இந்த நிலையில் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் தேவாலயச் சேவை புரிய அவர் இந்தியா அனுப்பப்படுகிறார். அவரோடு ஹென்ரிக் புளூட்சோ என்பவரும் கப்பல் ஏறுகிறார். 1706 ஜூலை 10, தனது 24வது பிறந்த நாளில் சீகன்பால்கு ஏறிவந்த கப்பல் தரங்கம்பாடியை அடைகிறது. தமிழக மண்ணின் பொதுக்கல்விக்கான பொற்காலம் இப்படித்தான் தொடங்கியது.




கப்பலில்தரங்கம்பாடி மீனவசகோதரர்களிடமிருந்து தமிழ்ப் பேச்சு மொழியின் 200 சொற்களை சீகன்பால்கு பிடிவாதமாகக் கற்றார். அந்தக் கூலிகளில் யாருக்குமே எழுதப் படிக்க அல்லது தமிழின் எழுத்து வடிவம் எதுவுமே தெரியவில்லை என்பது அவருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஏடெடுத்தால் தாங்கள் ஊரைவிட்டே ஒதுக்கி வைக்கப்படுவோம் என்று விவரித்த அவர்கள், தங்களது பார்வையில் சாதி என்பது என்ன, வர்ணாசிரமம் என்பது எப்படிப்பட்டது என்பதையெல்லாம் கூறுகிறார்கள்.

ஆனால் அதைவிடப் பெரிய அதிர்ச்சி ஒன்று அவருக்குக் காத்திருந்தது. டென்மார்க் மன்னர் தன்னை வேவு பார்க்கத்தான் சீகன்பால்குவை அனுப்பியிருப்பதாக கவர்னர் ஹாசியஸ் கருதிக்கொண்டான். கப்பலில் இருந்து படகில் ஏறி கரைக்கு வர அவருக்கு அனுமதிக்க மறுக்கிறான். மூன்று நாட்களுக்குப் பிறகு கடும் பட்டினியோடு கரைக்கு வருகிறார் அவர். கவர்னரைச் சந்திக்க அனுமதி மறுக்கப்படுகிறது. போர்ச்சுகீசிய அடிமைகளோடு அவர் தங்க வைக்கப்படுகிறார். நான்காம் பெடரிக் மன்னர் கைப்பட எழுதிய அரசாணை அவருக்கு அதிகாரத்தைக் கொண்டுவந்தது என்கிறது வரலாறு.

இதற்கிடையே முதலியப்பா என்பவரின் உதவியோடு தரங்கம்பாடி கடற்கரை மீனவத் தொழிலாளர்களோடு சீகன்பால்கு கலந்தார். போர்ச்சுகீசிய மொழியைக் கப்பல் பிரயாணத்தில் அவர் கற்றிருந்தார். இங்கு வந்ததும் தமிழ் மொழியைப் பேசி முழுமையாகக் கற்றார். ஆலப்பூ செட்டியார் எனும் புலவரின் தொடர்பு கிடைத்தது. ஊருக்கே தெரியாமல் அதிகாலை நான்கு மணிக்குக் கடற்கரை மணலில் நிலா ஒளியில் எழுதி எழுதித் தமிழ் பழகினார் சீகன் பால்கு. இருள் வகுப்பின் மூலம் அவருக்குள் தமிழ் ஒளியேற்றிய ஆலப்பூ செட்டியாரை ஆறு கிராமப் பஞ்சாயத்துகள் ஒதுக்கி வைத்ததாக வரலாறு சொல்கிறது. 'சாதியற்ற அயலானுக்குத் தமிழ் பயிற்றுவிப்பது தீட்டுக் குற்றம்' என்பதை யார் சட்டமாக்கியது? சனாதனம்தான்.

தேவாலயத்தின் பணிகளுக்காக இந்தியாவிற்கு அனுப்பபட்ட சீகன்பால்கு, சாதாரண மக்களின் சாதீய வன்கொடுமைத் துயரங்களைக் கண்டு மனம் கொதித்தார். அவர் முதலில் செய்த வேலை, டென்மார்க்கிலிருந்து கம்பெனி பணி நிமித்தமாக வந்திருந்த ஐரோப்பியர்களின் இல்லங்களில் எடுபிடி வேலை செய்த இந்தியக் கூலித்தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு ஒரு கல்வி இல்லம்



நடந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

இந்தியாவிலேயே முதன்முறையாக அந்த தரங்கம்பாடி டேனிஷ் பள்ளியில் 1709–ல் கரும்பலகை ஒன்று அறிமுகம் ஆனது. மொத்தம் ஏழு கரும்பலகைகள் செய்யவைத்தார் அவர். அப்போதெல்லாம் தமிழகத்தில் ஆங்காங்கே திண்ணைப்பள்ளி எனும் பெயரில் சில புலவர்கள் வகுப்பெடுப்பார்கள். பெரும்பாலும் தாம்பாளத்தில் மண் பரப்பி எழுதிப் பழகுவார்கள்.

தொடங்கியதுதான். எழுத்துப்பயிற்சியைப் பறையர்களுக்கும், புலையர்களுக்கும் அளித்து நம் தமிழகத்தின் முதல் பொதுக்கல்விப் புரட்சியை அவர் இப்படித்தான் தொடங்கிவைத்தார்.

அந்தக் கூட்டத்தில் கல்வி பெற்றவர்களில் விதவை அடிமைப்பெண் ஒருவரும் இருந்ததால், ஊர் கொதித்தது. அரசூர் பஞ்சாயத்தில் அவருக்கு கசையடி தண்டனை. அதை அவர் விரும்பி ஏற்கிறார். கவர்னர் ஹாசியஸ் மூலம் உயர்சாதி ஆட்கள் தந்த நிர்பந்தத்தால் ஆறு மாதச் சிறைத் தண்டனை. பிறகு அவரது சிறைவாசம் ஓராண்டாக நீட்டிக்கப்பட்டது. அந்த ஓராண்டு சிறை வாழ்வில் வேதாகமம் எனும் முழு பைபிளையும் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தார் சீகன் பால்கு. எனவே தமிழுக்கு முதலில் வந்த பைபிள் ஆங்கிலம் வழியே வந்தது அல்ல. கிரேக்க பைபிள் மற்றும் போர்ச்சுகீசிய – ஜெர்மன் மொழி சார்ந்த பைபிள் ஆகியவற்றின் கலவையாக சீகன்பால்கு அடிகளாரின் தமிழ் வேதாகமம் அமைந்தது.

அவர் விடுதலையான போது கவர்னர் ஹாசியஸ் இல்லை. மன்னர் நான்காம் பெடரிக் இப்போது சீசன்பால்குவின் சீர்திருத்தங்களை ஏற்றிருந்தான். தீவிர எதிர்ப்பு உயர்சாதி அமைப்புகளிடமிருந்து வந்தபோதும் தரங்கம்பாடியில் தேவாலயத்தின் கூடவே ஒரு சிறிய குடிலில் தனது முதல் பொதுப்பள்ளியை 1709–ல் அமைத்தார் சீகன்பால்கு. அனைத்துச் சாதிப்பிள்ளைகளுக்கும் அங்கே தங்குமிடம், உணவு இவற்றோடு கல்வியும் தரப்பட்டது. போர்ச்சுகீசிய மொழியும், தமிழ் மொழியும் உலக ஞானம் எனும் பாடமும் போதித்தார் அவர். பலமுறை அந்தப்பள்ளியைத் தீயிட்டுக் கொளுத்திட

ஐரோப்பாவிலிருந்து கப்பல் மூலம் சாக்குக்கட்டி வரவைத்தார் சீகன் பால்கு. இப்போது மாதிரி வெறும் சுண்ணாம்பில் சாக்குக்கட்டி தயாரிப்பது அப்போது கிடையாது. அதை ஆங்கிலக் கால்வாயின் பாறைகளில் வெட்டி எடுப்பார்கள். ஸ்லேட் பாறை என்று அவற்றிற்குப் பெயர். கல்வியில் புதிய ஜனநாயக அடையாளமாக கரும்பலகையானது சீகன்பால்கு அடிகளார் மூலம் இந்தியாவில் தமிழகத்தின் முதல் பொதுப்பள்ளியில் அறிமுகம் ஆனது.

தமிழர்களுக்கே தமிழை அறிமுகம் செய்தவர் என்று சீகன்பால்கு போற்றப்படுகிறார். லத்தீன் மொழிதான் அன்று உலகமொழியாக இருந்தது. தமிழ் இலக்கணத்தை லத்தீன் மொழியில் அவர் எழுதினார். அதுவரை தமிழகத்தின் யாருமே அறிந்திராத ‘நானாவித நூல்கள்’ என்று அவர் அழைத்த கொன்றைவேந்தன், உலகநீதி, நீதிவெண்பா மற்றும் ஆத்திசூடி ஆகிய தமிழ் அற நூல்களை முதன்முறையாக அச்சிட்டு வெளியிட்டவர் அவர். தனது பொதுப்பள்ளிகளை அடுத்து நெல்லிக்குப்பம் (கடலூர்) மற்றும் நூக்கம்பாடி (திருவண்ணாமலை) என அவர் விஸ்தரித்தபோது தரங்கம்பாடியில் கல்வி கற்றுத் தேர்ந்த கூலி வீட்டுப் பிள்ளைகள் ஆசிரியர் ஆகினர். சனாதன வெறியர்களின் கடும் எதிர்ப்பை மீறி நான்காவது பள்ளியை திருச்சிரபுரத்தில் அமைக்கும் பணிகளுக்கு ஊடாக 1719–ல் தனது 37வது வயதில் சீகன்பால்கு காலமானார். அவரது ‘பொதுப்பள்ளியே உண்மை ஞானம்’ (The General School is True Wisdom) எனும் நூல் அவசியம் வாசிக்கப்படவேண்டிய பொக்கிஷம்.

**(போராட்டம் தொடரும்...)**

# வெற்றிக்கான பழக்கங்கள் 11



எப்போதும் வெற்றியின் ஏணியில் ஏறும் மனிதர்களிடம் சில முக்கியமான பழக்கங்கள் இருக்கும். அவைதான் அவர்களின் வெற்றிக்கும் அடிப்படைக் காரணங்களாக அமையும். அப்படிப்பட்ட பழக்கங்கள்:

- வெற்றிகரமான மனிதர்கள் தாங்கள் நம்பும் ஒரு விஷயத்தை அடைவதற்காக விடாப்பிடியாக முயற்சிகள் செய்வார்கள். 'இது சாத்தியமில்லை', 'உங்களால் முடியாது' என்று மற்றவர்கள் சொல்வதைப் பற்றிக் கவலைப்படாமல் உறுதியாக முயற்சியைத் தொடர்வார்கள்.
- குறித்த நேரத்தில் ஒன்றைச் செய்வது, கொடுத்த வாக்குறுதியை மறக்காமல் இருப்பது என்று அவர்களிடம் எல்லா விஷயங்களிலும் ஓர் ஒழுங்கு இருக்கும்.
- ஒரு செயலில் ஜெயிக்க வேண்டும் என்றால், அதில் மிகச் சிறந்த திறமையை அடைய வேண்டும். மற்ற எல்லோரையும்விட அதிகம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அந்த அதீத திறமை அவர்களுக்கு இருக்கும்.
- அவர்கள் ஒரு துறையில் தங்கள் திறமையை வளர்த்துக்கொண்ட பிறகு, வாழ்நாள் முழுக்க அது மட்டுமே போதும் என நினைக்க மாட்டார்கள். வேறு பலவற்றைப் புதிதாகக் கற்றுக்கொள்வார்கள். ஒன்றில் பின்னடைவு ஏற்பட்டால், இன்னொரு துறையில் சாதித்துவிடுவார்கள்.
- வெற்றிகரமான மனிதர்கள் பலரும் தங்களைப் போன்ற வெற்றியாளர்களை நண்பர்கள் ஆக்கிக்கொள்வார்கள். தொழில் போட்டியாளர்களைக்கூட ஆரோக்கியமான நண்பர்களாகவே கருதும் மனப்பக்குவம் அவர்களுக்கு இருக்கும்.
- அவர்கள் வேகமாகச் சிந்திப்பார்கள். எந்த ஒரு விஷயத்தையும் மற்ற யாரும் பார்க்காத கோணத்தில் அவர்கள் அணுகுவார்கள். அதனால், சிக்கலான பிரச்னைகளுக்குக் கூட அவர்களால் எளிமையான தீர்வுகளைக் கண்டறிய முடியும்.
- வெற்றியாளர்கள் பலரும் தாங்கள் நேசிக்கும் ஒரு செயலை மிகுந்த உற்சாகத்துடன் செய்வார்கள். தங்கள் வாழ்க்கையே அதுதான் என்பது போலத் தாகத்துடன் செயல்படுவார்கள். தாங்கள் செய்யும் செயலுக்கு மிகுந்த மதிப்பு தருவார்கள். வேலை, தொழில், வியாபாரம் என்று அவர்கள் எது செய்தாலும், அதை எல்லோரும் பாராட்டும்படி இருக்கும்.
- 'இது சரியாக வருமா', 'இதைச் செய்தால் நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா' என்பது போன்ற தயக்கங்கள் அவர்களிடம் எப்போதும் இருக்காது. புதிதாக ஒன்றைச் செய்தாலும், அதில் ஜெயிப்பதற்கான வழிகளையே தேடுவார்கள். மிகுந்த நம்பிக்கையும் துணிச்சலும் கலந்ததாக அவர்களின் செயல்பாடு இருக்கும்.
- திறமைசாலிகளை அவர்கள் எளிதில் அடையாளம் கண்டுபிடிப்பார்கள். அவர்களிடம் என்ன வேலையை எப்படி வாங்குவது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். தங்கள் வெற்றிக்கும் யாரையெல்லாம் பயன்படுத்த வேண்டுமோ, தயக்கமின்றி அத்தனை பேரையும் பயன்படுத்திக்கொள்வார்கள்.
- கால மாற்றங்களை அவர்கள் எப்போதும் மற்றவர்களுக்கு முன்பாகத் தெரிந்துகொள்வார்கள். அதனால், எப்போதும் தேங்கி நிற்காமல், புதிது புதிதாக வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்றபடித் தங்களை மாற்றிக்கொள்வார்கள்.
- தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வதுதான் முன்னேற்றத்துக்கு வழி. ஆனால், அதைத் தவறு என்று எவ்வளவு சீக்கிரம் உணர்ந்துகொண்டு அதிலிருந்து வெளியில் வருகிறோம் என்பதும் முக்கியம். வெற்றிகரமான மனிதர்கள் பலரும், தங்கள் தவறுகளைத் தயக்கமின்றி ஒப்புக்கொண்டு உடனடியாகப் பாடம் கற்று அடுத்த முயற்சிக்குப் போய்விடுகிறார்கள். ●

# நல்லாசிரியர்களும் அன்பாசிரியர்களும்!

அறிவியலை வித்தியாசமான முறையில் மாணவர்களுக்குச் சொல்லித் தருவார் ராமச்சந்திரன் சார். ஒரு மரத்தைப் பற்றிய பாடம் என்றால், அந்த மரத்தை நேரில் போய் காட்டிப் பாடம் எடுப்பார். ஒரு விலங்கைப் பற்றிய பாடம் என்றால், அந்த விலங்கை முடிந்தால் காட்டுவார்; அல்லது அதன் படங்களைத் திரையிட்டுக் காட்டி விளக்குவார். அதனால், அவர் வகுப்பு என்றாலே பிள்ளைகள் ஆர்வமாகிவிடுவார்கள்.

ஒருநாள் அவர் திடீரென்று, ''டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த ஒரு விலங்கு பற்றிச் சொல்கிறேன்'' என்று ஓவியம் ஒன்றைக் காட்டினார். கங்காரு மாதிரி விநோதமாக இருந்தது அது. "இதன் பெயர் வாட்டிகேம்பஸ். இதற்கு எட்டு கால்கள், நீளமாக வால் இருக்கும், இரவில்தான் வேட்டையாடும்...'' என்றெல்லாம் நீண்ட நேரம் விளக்கினார். அதன்பின், ''நான் சொன்னதைப் பற்றியெல்லாம் இன்னும் கொஞ்சம் இணையதளத்தில் தேடிப் படிச்சிக்கிட்டு வாங்க, நாளைக்கு ஒரு டெஸ்ட் வைப்பேன்'' என்றார்.

அடுத்த நாள் தேர்வு. வாட்டிகேம்பஸின் கால்கள் எத்தனை, வால் எவ்வளவு நீளம் என்று அவர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும், அவர் நடத்திய பாடத்தை நினைவு வைத்தே பதில் எழுதினார்கள் மாணவர்கள். எல்லோரது விடைத்தாள்களையும் உடனே திருத்திக்கொடுத்தார் அவர். ஆவலாகப் பார்த்த மாணவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். காரணம், அனைவருக்குமே பூஜ்ஜியம் மார்க் போட்டிருந்தார்.

"ஏன் சார்?" என்று பலரும் கேட்டனர். "உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். வாட்டிகேம்பஸ் என்று ஒரு விலங்கே கிடையாது. நான் காட்டியது கற்பனை ஓவியம், நான் சொன்ன எதுவுமே நிஜமில்லை. அதனால்தான் உங்களை மேலும் படித்துவிட்டு வரச் சொன்னேன். ஆனால், யாருமே தேடிப் படிக்கவில்லை என்பது புரிகிறது. தேடியிருந்தால், 'அப்படி எதுவுமே இன்டர்நெட்டில் இல்லையே சார்' என்று என்னிடம் காலையிலேயே கேட்டிருப்பீர்கள்'' என்றார்.


மாணவர்கள் அனைவரும் தலைகுனிய, அவர் மீண்டும் சொன்னார். ''யார் எது சொன்னாலும் கண்மூடித்தனமாக நம்பிவிடக்கூடாது என்பதுதான் இதன்மூலம் நான் கற்றுக்கொடுக்க விரும்பிய பாடம்.''

நல்லாசிரியர்களும் அன்பாசிரியர்களும் இப்படித்தான் எல்லா வழிகளிலும் கற்றுத் தருவார்கள். பாடங்களைத் தாண்டிய கல்வியாக அது இருக்கும். வகுப்பறைத் தேர்வுகளைக் கடந்து வாழ்க்கை முழுக்கவும் உதவும் பாடங்கள் அவை. அடங்க மறுக்கும் மாணவர்களிடம்கூட அக்கறை காட்டி கற்றுத் தருவார்கள் அவர்கள். எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்கும் அப்படிப்பட்ட ஆசிரியர்களிடம் இந்தக் குணங்கள் நிச்சயம் இருக்கும்.

**கனிவுடன் நடப்பது:** கண்டிப்பு காட்டும் அதே நேரத்தில் கருணையும் பொழிவதே ஒரு நல்லாசிரியரின் பண்பு. மாணவர்களிடம் அவர்களின் வயதுக்கு இறங்கிப் பழகுவார்கள் இந்த ஆசிரியர்கள். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பக்குவமாக வழிநடத்துவார்கள். அவர்களின் கல்விநிலையைத் தாண்டி, குடும்பத்தைப் பற்றியும் தெரிந்துகொண்டு அவர்களை நெறிப்படுத்துவார்கள்.

**நேர்மறையான மனநிலை:** ஆசிரியர்களும் சராசரி மனிதர்கள்தான். குறும்பும் அடங்காத குணமும் கொண்ட பிள்ளைகளை வகுப்பறையில் கவனிக்கும்போது, ஏதோ ஒரு தருணத்தில் அவர்கள் எரிச்சலடையக்கூடும். அன்பான ஆசிரியர்கள் அந்த நேரத்தில் நிதானம் காப்பார்கள். மாணவர்கள் மன அழுத்தத்தில் சிக்கித் தவிக்கும்போது, கோபத்தை வெளிப்படுத்தி அவர்களை நிலைகுலைய வைக்க மாட்டார்கள். ஏனெனில், ஆசிரியரின் கோபமானது அந்த வகுப்பறையில் இருக்கும் அத்தனை பேரையும் பாதிக்கக்கூடியது என்று அவருக்குத் தெரியும்.

**பேச்சுத்திறமை:** ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு மிகச்சிறந்த பேச்சாளர். மாணவர்களை, அவர்களின் நிலைமை அறிந்து அன்பாசிரியர்களே பேசி ஊக்கப்படுத்துகிறார்கள். நல்ல மதிப்பெண் எடுக்கும் மாணவர்களை இன்னும் சிறப்பாகப் படிக்க வைக்கும்



அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்துகொள்வார்கள். அதேபோல, ஒரு மாணவர் தவறு செய்துவிட்டார் என்பதற்காக ஒட்டுமொத்த வகுப்பறையையும் தண்டிக்க மாட்டார்கள்.

**முன்மாதிரிகளைக் காட்டுவது:** ஒரு வகுப்பறையில் சிலர் பிரச்னைக்குரியவர்களாக இருக்கும்போது, அதை நல்லாசிரியர்கள் சாதுர்யமாகச் சமாளிப்பார்கள். அந்த வகுப்பிலேயே நல்ல மதிப்பெண்கள் வாங்கும், அமைதியாக நடக்கும் மாணவர்களைச் சுட்டிக்காட்டி, ''இவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களைச் சொல்கிறேன்'' என்று பாராட்டுவார்கள். மற்றவர்களுக்கும் பாராட்டு வாங்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும்.

**பிரச்னைகளைச் சமாளிப்பது:** வகுப்பில் அடங்காத மாணவர்கள் வாக்குவாதம் செய்யும்போது, அவர்களுடன் சரிக்குசமமாகக் கத்தமாட்டார்கள். அவர்களின் கோபத்துக்கான காரணத்தை விளக்கமாகக் கேட்டு, அந்தக் கோபத்தில் அர்த்தமே இல்லை என்பதைப் புரியவைப்பார்கள். வகுப்பைப் பார்த்துக்கொள்வது, கற்றல் தேவைகளைக் கவனிப்பது போன்ற பொறுப்புகளை அவர்களுக்குக் கொடுத்துத் திசைதிருப்புவார்கள். அவர்களுக்கு அக்கறை எடுத்துப் பாடம் சொல்லித் தருவார்கள்.

**பரிசாக உணர்வது:** நல்லாசிரியர்களும் அன்பாசிரியர்களும், ஆசிரியர் பணியை அரிதான பரிசாகக் கருதுவார்கள். அடுத்த தலைமுறையின் வாழ்க்கையைச் செதுக்கும் மாபெரும் பொறுப்பு தங்களுக்கு இருப்பதை உணர்வார்கள். பல பேரின் எதிர்காலத்தையே மாற்றும் மகத்தான கடமை தங்களுக்கு இருப்பதை அவர்கள் அறிவார்கள். ●

அவர்களின் பேச்சு! தோல்வியில் துவண்டவர்களை ஆசிரியர்களின் ஆறுதல் மொழியே மீட்டு வரும். சராசரி மாணவர்களையும் முதல் வரிசைக்கு வரவழைக்க ஆசிரியர்களால் மட்டுமே முடியும்.

**மரியாதை கொடுப்பது:** தன்னைவிட வயதில் குறைந்தவர்கள் என்பதற்காக மாணவர்களை நல்லாசிரியர் எவரும் மரியாதைக் குறைவாக நடத்த மாட்டார்கள். ஒருவரின் வயது, தோற்றம், பின்னணி, நிறம், சமூகம் என்று எந்த வித்தியாசத்தையும் பார்க்காமல், எல்லோரையும் நேசிக்க வேண்டிய சக மனிதர்களாகப் பார்ப்பது அன்பாசிரியர்களின் பழக்கம். இப்படி மரியாதை கொடுத்து, அவர்களின் தன்னம்பிக்கையை வளரச் செய்து ஒவ்வொருவரையும் கைதூக்கி விடுவார்கள்.

**வித்தியாசம் உணர்வது:** ஒரு வகுப்பறையில் 40 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், எல்லோரையும் ஒரே மாதிரி நடத்துவார்கள். அதே சமயத்தில் ஒவ்வொருவரும் தனித்தனி இயல்புகள் கொண்டவர்கள் என்பதைப் புரிந்து வைத்திருப்பார்கள். ஒவ்வொருவரின் கற்றல் திறனுக்கு ஏற்றபடியும் தனித்தனியே பார்த்து சொல்லிக் கொடுப்பார்கள். ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே பேசவைத்து,




# ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளை 44-ம் ஆண்டு பரிசளிப்பு விழா!

திரைக்கலைஞர் சிவகுமார் அவர்கள், தனது கல்வி அறக்கட்டளை மூலம் கடந்த 43 ஆண்டுகளாக, பிளஸ் 2 தேர்வில் நல்ல மதிப்பெண்களை எடுத்த, மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பரிசளித்துப் பாராட்டிக் கௌரவித்து வருகிறார். மாணவர்களை ஊக்கப்படுத்த, தனது 100–வது படத்தின்போது, ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளையை அவர் தொடங்கினார். தகுதியான மாணவ, மாணவிகளை அடையாளம் கண்டு, தனது அறக்கட்டளை மூலம் தொடர்ச்சியாகப் பாராட்டி வருகிறார்.

ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளையின் 44–ம் ஆண்டு பரிசளிப்பு விழா நிகழ்வு, சென்னை சாலிகிராமம் பிரசாத் ஸ்டூடியோ அரங்கில் நடைபெற்றது. விழாவில் 25 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ. 2,50,000/– (இரண்டு லட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) பரிசளிக்கப்பட்டது. இத்துடன் திண்டிவனம் கல்வி மேம்பாட்டுக் குழு நடத்தும் தாய்த்தமிழ்ப் பள்ளிக்கு நிதியுதவியும், மூத்த ஓவியக் கலைஞர் ஜெயராஜ் அவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சமும் வழங்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம் சோமாண்டர்குடி அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. ஞானபிரகாசம் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளுக்காகவும், 'குறள் வழிக் கல்வி' எனத் திருக்குறளின் மேன்மையைப் பள்ளியெங்கும் மாணவர்களின் மனதில் விதைக்கும் திருச்சி சிறுகாம்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், உழவன் ஃபவுண்டேஷன் நிறுவனர் நடிகர் கார்த்தி பேசும்போது, "ஒரு முழுமையான மனிதனை உருவாக்குவதுதான் கல்வியோட நோக்கமா இருக்க முடியும். ஆனால் இன்றைய சூழலில் மதிப்பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தர்ற மனநிலை குறையவே இல்லை. மாணவர்களின் உடல்நலம், மனநலம் பற்றிய போதிய அக்கறை கல்விச் சூழலில் இல்லை.

வெற்றிகரமா இருக்கணும், அதே நேரம் மகிழ்ச்சியாக இருக்கணும். நம்ம எல்லாருக்குள்ளும் ஒரு திறமை நிச்சயமா இருக்கு. அதை வெளிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் வழிகாட்டுவது கல்வியின் நோக்கமாக அமையவேண்டும். மதிப்பெண்கள் வாங்குவது மட்டும் கல்வி அல்ல, அன்றாட வாழ்விற்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பினை எடுத்துக் கூறுவதும் புரிய வைப்பதும் கல்வி முறைதான்.




சமூகத்திலும் பொருளாதாரத்திலும் நம் நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை உடைக்க வேண்டிய அவசியத்தைச் சொல்லித்தருவதும் கல்விதான்” என்றார்.

வரவேற்புரை முடிந்ததும் மாணவர்களுக்குப் பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து பரிசு பெற்ற மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

அகரம் ஃபவுண்டேஷன் நிறுவனர் நடிகர் சூர்யா பேசும்போது, “ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளை 43 ஆண்டுகளாக இளம் மாணவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை வழங்கி வருவதன் தொடர்ச்சியே அகரம். சரியான, சமமான கல்வி வாய்ப்பிற்காக, ஒத்த கருத்துடைய மனிதர்கள், கல்வி நிறுவனங்கள், கல்வி சார்ந்த அமைப்புகளுடன் இணைந்து அகரம் பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.

கல்வியின் மூலம் நிரந்தர, நீடித்த மாற்றங்களை உருவாக்க முடியும். இளம் பருவத்தினரில் ஒரு சிலரது வாழ்க்கைக் கனவுகளை நனவாக்கும் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட அகரம் விதைத் திட்டம், கடந்த 14 ஆண்டுகளில் 5,200 மாணவ மாணவியர்க்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கியிருக்கிறது. குறிப்பாகக் கடற்கரைப் பகுதிகள், மலைக் கிராமப் பகுதிகள், அகதிகள் முகாமில் வசிப்பவர்கள் என்று பல்வேறு பகுதிகளில் உள்ள மாணவர்கள் பலனடைகிறார்கள்.

இப்போது, பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து பள்ளி மேலாண்மைக் குழு, நான் முதல்வன், அரசுப் பள்ளிகளில் படித்த முன்னாள் மாணவர்களைப் பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பொறுப்பேற்கச் செய்வது போன்ற மேம்பாட்டுத் திட்டங்களில் அகரம் பங்கெடுத்து வருகிறது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கெனவும், வாழ்வின் அடுத்த பரிமாணத்தை நோக்கி அவர்களை அழைத்துச் செல்வதற்கும் அகரம் சவாலான பணிகளை முன்னெடுத்து வருகிறது. தன்னார்வலர்கள் பொறுப்பேற்று நடத்தும் அகரம் பணிகளுக்கு உந்துசக்தியாக உடன் நிற்கும் நன்கொடையாளர்கள், விதைத் திட்ட மாணவர்களின் கல்வி வாய்ப்பிற்காகத் தொடர்ந்து ஆதரவுக் கரம் வழங்கி அரவணைத்துக் கொள்ளும் கல்வி நிறுவனங்கள் என்று அனைவருக்கும் நன்றிகள். ஊர் கூடித் தேர் இழுப்பது போன்றுதான் அகரம் பணிகள். எளிய குடும்பங்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஒன்றிணைந்திருப்பது முன் எப்போதையும்விட இன்று அவசியமானதாக இருக்கிறது. அகரம் என்றாலே அதன் அர்ப்பணிப்புமிக்க தன்னார்வலர்களே ஆதாரம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தருணத்தில் வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. சிவகுமார், “1979–ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அறக்கட்டளை தொடர்ந்து, பிளஸ் 2 தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. 30 ஆண்டுகள் என் பொறுப்பில் இயங்கிய அறக்கட்டளையை, அதற்குப் பிறகு அகரம் ஃபவுண்டேஷன் பொறுப்பேற்றுச் சிறப்பாகக் கல்விப் பணி செய்து வருகிறது. சிறிய அளவில் ஏழை மாணவர்களுக்குச் செய்த உதவியை, என்னுடைய பிள்ளைகள் இப்போது நல்ல முறையில் செய்து வருகிறார்கள். கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் படிக்க எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். கல்வி ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை எந்தளவு உயர்த்தும் என்பதையும் நான் அனுபவப்பூர்வமா உணர்ந்திருக்கேன். என்னைப் போல ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து நன்றாகப் படிக்கிற பிள்ளைகளுக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்வதில் மிகுந்த மனநிறைவு அடைகிறேன். தடைகளைத் தாண்டி பெற்ற முதல் வெற்றி இது. இன்னும் போக வேண்டிய பயணம் வெகுதூரம் உள்ளது. மாணவர்கள் தங்களுடைய கவனம் சிதறாமல், தொடர்ந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்” என்று கூறினார்.

விழா நிகழ்வை சென்னை ஆல்பா கலை அறிவியல் கல்லூரியில் படித்து வரும் மாணவி நர்மதா, மாநிலக் கல்லூரியில் படித்து வரும் முகில்ராஜ் இருவரும் தொகுத்து வழங்கினர். பேராசிரியர் கல்யாணி, அகரம் தன்னார்வலர்கள், முன்னாள் மாணவர்கள், இந்நாள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**கற்றல் கதைகள்**

# பற்றிக்கொள்ளும் கரங்கள்!



ஆசிரியருக்கு ஒருநாள் எதிர்பாராதவிதமாக அவசரமான அலுவலகப் பணி வந்துவிட்டது. வகுப்புக்குள் வந்தவர், "நீங்க எந்த ஒரு விஷயத்துக்கு நன்றி சொல்ல நினைக்கிறீங்களோ, அதை ஓவியமா வரைங்க'' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து தன் வேலைகளில் மூழ்கினார். எல்லா மாணவர்களும் அமைதியாக வரைய ஆரம்பித்தனர்.

அரை மணி நேரம் கழித்து எழுந்து நடந்தபடி எல்லோரது ஓவியங்களையும் பார்த்தார். அம்மா, அப்பா, கடவுள், சூரியன், வயல்வெளி, விவசாயி, டாக்டர், போலீஸ்காரர் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு உருவத்தை வரைந்துகொண்டிருக்க, சிவா மட்டும் வித்தியாசமாக வரைந்திருந்தான். அவனது பேப்பரில் ஒற்றைக் கரம் மட்டுமே இருந்தது. வெறுமனே ஒரு கை. ஆசிரியருக்குக் குழப்பம். அது யாருடைய கையாக இருக்கும்? கடவுளின் கை? பெற்றோரின் கை? அல்லது டாக்டரின் கை?

அவனிடமே போய், "இது யாருடைய கை?'' என்றார். "உங்களுடைய கை சார்" என்றான் சிவா. "பல நாள் எங்களைக் கைப்பிடித்து அழைத்துப் போயிருக்கிறீர்கள். கைப்பிடித்து எழுதக் கற்றுத் தருகிறீர்கள். நாங்கள் படிப்பது உங்களால்தான். அதை நன்றியுடன் நினைக்கவே, உங்கள் கையை வரைந்தேன்" என்று சிரித்தபடிச் சொன்னான் சிவா. ஆசிரியர் அன்று தன் மதிப்பைக் கற்றுக்கொண்டார்.

பள்ளியிலிருந்து அழுதபடி வந்தான் 10 வயது சிறுவன். "என்ன விஷயம்?'' என்று கேட்டார் அப்பா. "எனது பணக்கார வகுப்புத் தோழர்கள் என் இயலாமையை, வறுமையைக் கேலி செய்கின்றனர்" என்றான்.

அப்பா யோசித்தார். "அந்தக் கவலையை மறக்க என்னுடன் வா. தோட்டத்தில் சில விதைகளை நடுவோம்" என்று அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். ஆளுக்குக் கொஞ்சம் விதைகளை உற்சாகமாக நட்டார்கள். "ஒரு பரிசோதனையைச் செய்வோம். நான் நட்ட விதைகளுக்கு குழாயிலிருந்து நல்ல தண்ணீர் பிடித்துவந்து ஊற்றுகிறேன். நீ நட்ட விதைகளுக்கு குளத்திலிருந்து அழுக்குத் தண்ணீர் கொண்டுவந்து ஊற்று. என்ன ஆகிறது என்று பார்ப்போம்" என்றார் அப்பா.


விதைகள் முளைத்து வரச் சில நாட்கள் ஆயின. அவர்கள் சொன்னபடி தண்ணீர் ஊற்றி வந்தார்கள். கொஞ்ச நாட்களில் அவற்றில் சில செடிகள் நன்கு பூத்தன. வெண்டைக்காயும் கத்தரிக்காயும் சில செடிகளில் காய்த்துத் தொங்கின.

மகனைத் தோட்டத்துக்கு அழைத்த அப்பா, "என்ன வித்தியாசம் தெரிகிறது?" என்று கேட்டார். மகன் உற்றுப் பார்த்துவிட்டு, "நீங்கள் நல்ல தண்ணீர் ஊற்றினீர்கள். நான் அழுக்குத் தண்ணீர் ஊற்றினேன். ஆனாலும், நான் நட்ட செடிகளில் பூக்கள் பெரிதாகப் பூத்திருக்கின்றன. காய்கறிகளும் பெரிதாகக் காய்த்திருக்கின்றன. இது எப்படி சாத்தியம்?" என்று கேட்டான்.

தந்தை சிரித்தார். "ஏனென்றால், அழுக்கு நீர் ஒரு செடியின் வளர்ச்சியைத் தடுக்காது. மாறாக, அது செழிக்கவே உதவும். வாழ்க்கையில் உன்னைத் தாழ்த்திப் பேசுபவர்கள், உன் மீது அழுக்கை வீசுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். எப்போதும் நினைவில் கொள், தங்கள் கர்வத்தையும் ஆணவத்தையும் வெளிப்படுத்தவே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவை உன்னைப் பாதிக்கக்கூடாது. அவற்றை உரமாக்கிக்கொள். அப்படிச் செய்தால், நீ சிறந்தவனாக மாறுவாய்" என்றார். மகன் அன்று வாழ்க்கைப்பாடம் கற்றான்.



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication First week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month.






மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்
- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia


If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801